845

Reg. No. M. 1482.

ஸமரஸபோதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture & Village improvement etc.,

"தேரிந்த வினைத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor.

புத்தகம் 1. | ரௌத்ரி௵ புரட்டாசி௴ 13௳ புதன்கிழமை 29th Sep. 1920. தஞ்சாவூர். | பிரதி 16.

ஸமரஸபோதினி.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 3—0—0
பினாங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0
தனிப் பிரதி விலை	ரூ 0—2—0

விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

Kerosine Gas Stoves.
கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.
கோரனேஸ்ட்வ் நெ. 5. ரூ **14-0-0**.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.
The Manager, **Young India**.
Ahmedabad.

Greatest Selection Under One Roof,
Fresh Arrivals, Straight From Mills.

White Twills, KAKI TWILLS, Fancy Twills.

Zephyres. FINE & FANCY SHIRTINGS, White Drills,

KAKI DRILLS.—Tassores

FASHIONABLE SUITINGS & COATINGS,

Surat Mill Dhotees Bleached; All Made
By Indian Cotton, By Indian Labour, For Indian People.
Can Get At The House With The Stock
Where Service, Quality & Prices are Always The Best.

O-R-I-E-N-T-A-L-S

AIYEN KADAI STREET. TANJORE. Fort.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

சந்தாதாரர்களே !

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. ரா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதினி, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையை ஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்
வருடசந்தா ரூபா 1—8—0.
குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

ஓம்.

மஹானருளிய

மூலிகையாலும் தாயத்தாலும் ...
திகளும் கவலைகளும் உடனே நீங்...
கெர்ப்பம் உண்டாகும். பதி...
அனுப்பினால் உடனே சகல ...
கும்.

எஸ். எ. கே. பிள்ளை, ...
கோயமுத்தூர் ...

கனவான்களின்
உயர்ந்த லீவர் வாட்சுகள்.

இந்த கெடியாரத்தின் பின்புறமுள்ளமூடியின் பேரில் வெகு அழகாய் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல உறுதியுள்ள சாமான்களால்நீடித்து உழைக்கக் கூடியனவாய் தயாரிக்கப்பட்டவை. ரூ. 4-8-0 ரேடியம் 8 மூலை ரிஸ்ட்லெட் வாட்சு விலை ரூபா 7-0-0, ரேடியம் ரவுண்டு வாட்சு விலை ரூபா 6-0-0, ரேடியம் இல்லாத சாதா வாட்ச விலை ரூபா 5-0-0.

தைரியலக்ஷ்மி & கம்பெனி,
தபாற்பெட்டி 265, மதராஸ்.

பிளுபிளாக் இங்க் மாத்திரைகள்.

விலை சரஸம், எழுதினல் அழியாதது. பிரகாசமுள்ளது. இங்கியில் திப்பி கிடையாது. ஒரு இங்க் பாட்டில் நிரம்ப இங்க் கரைக்க ஒரு மாத்திரை போதும். (தபால் கூலி பிரத்தியேகம்.)

எ. ச். பிரதர்ஸ் & கோ.
61, ராஜாநாபா கிருஷ்ண தெரு,
கல்கத்தா.

சரக்கு நயம்! விலை சரசம்!!

எல்லாவித கெட்டிச் சாயபவுடர்கள்.

நூல்களுக்கும் துணிகளுக்கும் பட்டு & கோரைகளுக்கும் சாயம் போடுவதற்கு நயமானது. காங்கோரெட் சிகப்பு காசிகப்பு மரூன் கெட்டி ரோஸ்பட்டு ரோஸ், புதுக்கோட்டை சாபம், பட்டு புனு பச்சை மஞ்சள் ஆரஞ்சி முதலிய சாயப்பவுடர்கள் எல்லாவித அச்சி கட்டைகள் அச்சிக்கு வேண்டிய உப்பு காறங்களும் சாயம் போடப்பட்ட விதம் சொல்லி சகாயமான விலைக்கு மொத்தமாயும் சில்லரையாயும் விற்கப்படும். வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமும் பெற்றுக் கொள்ளலாம். காகிதம் எழுதுவோர் சரியான விலாசம் ஊர் மார்க்கம் ஸ்டேஷன் தெளிவாய் எழுதவேண்டியது.

சி. ஆர். ராமய்யர் & ஸன்ஸ்,
சாயபவுடர் வியாபாரிகள்,
2/1276. பந்தடி 5-வது தெரு,
மதுரை.

நகைத் தொழிற்சாலை.

எங்களிடம் ஒரு தடவை வேலை கொடுத்துப் பாருங்கள். 30வருஷ அனுபோகம் பெற்றவர்கள். 1914வருஷ மதுரையில் நடந்த கண்காக்ஷியில் நமது சென்னை கவர்னராகயிருந்த மாக்ஷிமை தங்கிய பெண்ட்லண்டு பிரபு அவர்களால் மெச்சிக்கப் பெற்றது. ஒவ்வோரு நகையும் நமது சொந்தப்பார்வையில் செய்யக்கூடியது.

எங்களிடத்தில் செயயக்கூடிய நகைகளுக்கு நங்களே உத்திரவாதம் இருப்போம்.

கு. கிருஷ்ணய்யர்
தங்கம் போன் நகைவிலை வியாபாரி
மால் வடம் போக்கி தெரு, மதுரை

மதுரை சிகப்புப் புட்டா சேலைகள்.

சிவப்பு ஒருபுள்ளிசேலை ரூ. 7-8; 3 புள்ளிசேலை ரூ. 7-12; 7 புள்ளிசேலை ரூ. 8; கருப்பு 1 புள்ளிசேலை ரூ. 8-4; 7 புள்ளிசேலை ரூ 8-12; இன்னும் டோரியா, சரிகை பட்டுதுப்பட்டாக்களும, சித்தாடைகளும, ரவிக்கைகளும், விலைக்குச் சரசமாய்கிடைக்கும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—
கெமிகலர் டிரேடிங் கம்பெனி,
27, ஜடாமுனித்தெரு, மதுரை.

பல கண்காக்ஷிகளில் மேடல்கள்பெற்ற
அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில்
சன்னதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்து கொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, கை கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும்போகும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, அபிரிமிதமான தாதுவிருத்தியையும் யுண்டாகும். நீர்த்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினல் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. செலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

இனம்! இனம்!! இனம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே
(செப்டம்பர் மாதம் **30**-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)

இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுண்டன்பேனவையொத்த ஒருபுதுமாதிரி "வேல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேன இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்நிப்புடனும், மிக அழகாயும் ஷெ பேனவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷெ பேனவை பாக்கெட்டில் எந்த மாதிரி ...போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக் ...ன்றே செய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனக்கள்பிரதிதினமும் நூற்றுக் ...க்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக் ...ளவும்.

"வெல்லஸ்லி" பேனக்களில் பல மாதிரிகள்.

...வி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனவை போலவே
...லை ... ... ரூ. 4 8.
...டி ,, 12 ... ... ,, 5 0.
,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனவிற்கு இங்கிபோட
...ல் ஷெ பேனவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனவின்மெலுள்ள
...கினல் பேனவானது இங்கியை தானகவே உட்கொள்ளும். ,, 5 8.
...விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனம்.
...ஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத்தொகைகளைக் காலதாமதமன்னியில் அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's&Truth's"

ரௌத்ரி௵ புரட்டாசி௴ ௧௪வ புதன்கிழமை.

29th SEPTEMBER 1920.

பஞ்சாயத்து சபைகள்.

கல்கத்தாவில் கூடிய விசேஷ பாரத மகா சபையானது இந்தியர்களின் வியவகாரங்களைத் தீர்த்து வைக்கப் பஞ்சாயத்து சபைகள் நாடெங்கும் ஏற்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. இப்பொழுது பிரிட்டிஷ் நியாய ஸ்தலங்களில் நியாய பரிபாலனத்தை உத்தேசித்து நியாயாதிபதிகளோடு ஒத்துழைக்கும் வக்கீல்கள் நமது தேசத்தில் ஆயிரக்கணக்கான பேர்களிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் தங்கள் தொழிலிலிருந்து விலகிக் கொண்டு பஞ்சாயத்து சபைகளைஸ்தாபித்து, விசாரணைக்காக ஜனங்களால் கொண்டுவரப்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்றும் அத்தீர்மானம் கூறுகின்றது. ஆனால் இந்த நிமிஷமே வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டுவிடவேண்டுமென்று ஒருவரும் சொல்லவில்லை. பஞ்சாயத்து சபைகளை முதலில் ஸ்தாபித்துக் கொண்டு படிப்படியாக வக்கீல்கள் தொழிலை விட்டு விலகிக் கொள்ள வேண்டுமென்பதுதான் கருத்து.

இச்சந்தர்ப்பத்தில் பஞ்சாயத்து சபைகள் இப்போது அவசியமா? அவைகளை ஏற்படுத்த முடியுமா? அவ்விதம் முடிந்தால் அவைகள் செவ்வனே நடைபெறுமா? அச்சபைகளுக்கு ஜனங்கள் தங்கள் வியவாரங்களை விசாரணைக்குக் கொண்டுவருவார்களா? இவைபோன்ற பற்பல கேள்விகளைக்கேட்கலாம். நமது தேசத்திற்கு இச்சபைகள் புதியவையல்ல.

முற்காலத்தில் ஒவ்வொருகிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து சபை இருந்ததென்றும் அது அவ்வூர்சம்பந்தமானஎல்லாவழக்குகளையும்தீர்த்துவைப்பதுவழக்கமென்றும்சரித்திர ஆசிரியர்கள்கூறியுள்ளார். கிராமத்திலுள்ள பெரிய குடும்பங்களில் பஞ்சாயத்து மூலமாகப்பாகப்பிரிவினைஏற்பட்டிருக்கிறது. மேலும் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களுக்குள் ஏற்படும்தகராறுகளென்ன, வாய்க்கால் வெட்டுச்சண்டைகளென்ன, பாசனத்திற்குக் குறிக்கப்பட்டிருக்கும் தண்ணீர்முறை சச்சரவுகளென்ன, அது நிமித்தம்உண்டாகும் அடிதடி சண்டைகளென்ன, வரப்புத் தகராறுகளென்ன, தேவாலயங்களில் நடக்கும் உபய விஷயமாக வியாஜ்யங்களென்ன, மான நஷ்டத்திற்காகக் கொண்டுவரப்படும் பிரியாதுகளென்ன, இவைப் போன்ற பலவிதமான வியாவகாரங்களெல்லாம் பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு நியாயம் வழங்கப்பட்டுவந்தனவென்பதைப் பெரியோர்கள் சொல்ல யாவரும் கேட்டிருப்பார்கள். இந்நாளில் சர்க்கார் நியாய ஸ்தலங்களில் சாட்சி விசாரணை நடப்பதுபோல அந்தநாளிலும் நடந்து வந்ததென்பது யாவருமறிந்தவிஷயம். அந்தந்தக் கிராமத்திலுள்ளோர்கள் சாட்சிகளாக வருவது வழக்கம். கிராமவாசிகளெல்லோரும் சத்திய சந்தர்கள். ஒரு பொழுதும் பொய் சொல்லாதவர்கள்; ஒருவர் மற்றொருவரின் சொத்துக்கு ஆசைப்படாதவர்கள்; மோசம் செய்ய வேண்டுமென்கிற எண்ணமில்லாதவர்கள்; ஒருவருக்கொருவர் பூர்ண நம்பிக்கையுள்ளவர்கள்; பாபத்திற்குப் பயந்தவர்கள்; தர்மசாஸ்திரத்தின்படி நடக்கக் கூடியவர்கள்; ஈசுவர பக்தியுடையவர்கள். ஆகையால்தான் நீதி முறை தவறாமல் அக்காலம் நியாயம் வழங்கப்பட்டு வந்தது. பஞ்சாயத்தார்கள் சிரமமன்னியில்நியாயத்தைத் தீர்த்து வைத்தார்கள். அவர்கள்செய்த தீர்ப்புகளுக்குக்கட்சிக்காரர்கள் கட்டுப்பட்டு வந்தார்கள்; தேசம் சுபிட்சமாக விருந்தது. ஜனங்கள் சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் வாழ்ந்து வந்தார்கள்.

பிரிட்டிஷ் அரசாட்சி ஏற்படுத்தப்பட்ட நாள் முதற்கொண்டு நம்தேசம்பலமாறுதல்களை அடைந்தபடியால் கிராமத்திலிருந்த புராதன அனுஷ்டானங்களெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக மறைந்து கொண்டே வந்தன. அதற்கு அனுசரணையாகப்பிரிட்டிஷாரும் சட்ட திட்டங்கள் செய்தனர். மேல் நாட்டாரின் நாகரிக மாயையில் ஜனங்கள் சிக்கிக்கொண்டு தங்களுடைய தர்மத்தை மறந்து விட்டார்கள்; மேனாட்டாரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்ற தலைப்பட்டார்கள்; சத்தியத்தைக் கைநழுவவிட்டார்கள். பேராசை கொண்டு ஒருவரை யொருவர் மோசம் செய்ய எண்ணம் கொண்டார்கள் "இந்தியர்கள் சத்திய சந்தர்கள் சொன்ன சொல் தவறாதவர்கள்" என்னும் பெயரை இழந்து விட்டார்கள். சுருக்கமாகக்கூறுமிடத்துப்பொறாமை நம்பிக்கைகுறைவு, அஸூயைமுதலிய துர்க்குணங்கள் ஜனங்களுக்குள் பரவலாயின.

கிராமத்தில் பஞ்சாயத்தார்கள் தீர்த்து வந்த வியவகாரங்களெல்லாம் இப்பொழுது சர்க்கார் நியாயஸ்தலங்களில் தீர்க்கப்படுகின்றன. கட்சிக்காரர்கள் சிவில் கிரிமினல் கோர்ட்டுகளுக்குப் போவதால் எவ்வித கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம்சொல்லாமலே யாவரும் அறிவர். ஒருமனிதன் தனக்குள்ள வியாஜ்யத்தைத் தீர்த்துக்கொள்ளக் கோர்ட்டுக்குப் போகும் பட்சத்தில், அதனால அவனுக்குண்டாகும் பொருள் நஷ்டமும் கோர்ட்டாரவர்களினால் உண்டாக்கப்படும் காலதாமதமும் மனோவியாகூலமும் சொல்லி முடியா. ஒருவருக்கொருவருக்குள்ளமனஸ்தாபத்தினாலும்பொறாமையினாலும் கெட்ட எண்ணத்தினாலும்பலவிதமானவியவகாரங்கள்ஏற்படுகின்றனவென்று கூறிவிடலாம். அற்ப வழக்குகளுக்காக மூன்று கோர்ட் வரையில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிப்பதைநாம் பார்க்கவில்லையா? அற்ப விஷயங்களைப்பிரமாதாகப்பாவித்து ஆறுவருஷகாலம் கட்சியாடுவோரைநாம நேரில் கண்டதில்லையா? பொய்யானகேசுகளைஉண்டுபண்ணி பொய்சாட்சிகளைக் கொண்டு லாபம்தேடுவோர்களைநாம் அறிந்ததில்லையா? கலகங்களையுண்டுபண்ணி பெரிய குடும்பத்தினர்களைக் கோர்ட்டிற்கு இழுத்து அதின்மூலமாய்ப்பிழைக்கும் பாவிகளை நாம் பார்த்ததில்லையா? இவைகளுக்கெல்லாம் காரணமென்ன? சத்தியத்தையும் தர்மத்தையும் நாடி நாம் நிற்காததுதான் என்று சொல்லவும் வேண்டுமா? மேலே கூறியுள்ள வியவகாரங்கள்போலொத்தவைகளை முற்காலத்தில் கிராமத்திலுள்ள பஞ்சாயத்தார்கள் தீர்த்து வைக்கவில்லையா? இவைகளை யெல்லாம்நன்றாக்அறிந்திருந்தும் நாம் சும்மாவிருக்கலாமா? தாங்கமுடியாத கோர்ட்டு நடவடிக்கைகளின் செலவினால் ஏழைஇந்தியர்கள் மிகவும் கேவலஸ்திதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இதைத்தடுக்கவேண்டியது ஒவ்வோர் இந்தியரின்கடமையல்லவா? இதை யார் மறுப்பார்கள்? ஆனதைப்பற்றியே காங்கரஸில்மேலே சொல்லியதீர்மானம் நிறைவேற்றபட்டது.

இனி நாம் என்ன செய்யவேண்டும்? தேசாபிமான முள்ள இந்தியர்கள் ஊர் ஊராய்ச் சென்று பஞ்சாயத்துகள் மூல[illegible]ய் எல்லா வியவகாரங்களையும் தீ[illegible] கொள்ள வேண்டுமென்று ஜனங்களுக்கு வற்புறுத்திச் சொல்ல வேண்டும். சொல்லுவதோடு நில்லாமல் ஆங்காங்குப்பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்த வேண்டும். ஜனங்கள் எப்பொழுதும் சத்தியத்தைக் கடைபிடித்து நடக்கும் வண்ணம்உபதேசிக்க வேண்டும். குடும்பச் சண்டைகளும் சரி, கிராமப் பொதுவிலுள்ள வியவகாரங்களும் சரி, ஒரு வகுப்பினருக்கும்மற்றொரு வகுப்பினருக்குமுள்ள மனஸ்தாபங்களும் சரி, இவை[illegible] களெல்லாவற்றையும் பிறர் நன்மையைக்[illegible] துபவரும், சட்டத்தில் பிரக்ஞையுள்[illegible] மான வக்கீல்மார்கள் பட்சபாதமின்[illegible] யமாக விஷயங்களை விசாரித்து[illegible] செய்தால் இந்தியச் சமூகத்தி[illegible] களுக்கு மிகவும் நன்றி பாரா[illegible] செய்ந்நன்றியை ஜனங்கள் [illegible] கள்.

லார்ட் விட்டன் [illegible] ஹாவுக்குப் பதில்க[illegible] யாக நியமிக்கப்பட்[illegible]

இடை நிலை விளக்கு.

பாராட்டுகிறோம்.

விசேஷகாங்கரஸின்விஷயாலோசனைக்கமிட்டி நடவடிக்கைகளை வெளியிடக்கூடாதென்பது தொன்று தொட்ட வழக்கமாயிருக்கின்றது. இவ்வழக்கத்திற்கு மாறாக ஒருபத்திரிகை நடந்தால் அதன் நடத்தையை ஒருவரும் சிலாகிக்கமாட்டார்கள். பத்திரிகை நடத்தும் தர்மத்தை உணர்ந்த அலகபாத் இண்டிபெண்டென்ட் பத்திரிகைதான் காங்கரஸ் விடியாலோசனைக் கமிட்டி நடவடிக்கைகளை வழக்கத்திற்கு மாறாகப் பிரசுரித்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு தன் பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்ட இண்டிபென்டென்ட் பத்திரிகையின் பெருந்தன்மையைப் பாராட்டுகிறோம். ஆனால் சில பத்திரிகைகள்பத்திப்பத்திகளாக இரண்டு மூன்றுநாள் விஷயாலோசனைக் கமிட்டி நடவடிக்கைகளை வெளியிட்டிருந்தும் இன்னும் அவைகள் பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாதது விசனிக்கத்தக்கது.

"காடல்தெரு"

இந்நகர் மகர்நோன்புச்சாவடியிலுள்ள பழைய பண்டாபீசுக்குப் பக்கத்துச் சந்துக்குக் காடல்தெரு என்று பெயர் கொடுக்க வேண்டுமென்று முனிஸிபாலிட்டியார் தீர்மானம் செய்துவிட்டதாகவும் அந்தப் பெயரை அத்தெருவிலுள்ளோர் ஆட்சேபிப்பதாகவும் அறிகிறோம். பொதுவாக ஜனங்களுடைய விருப்பத்திற்கு மாறாக முனிசிபாலிட்டியார் நடப்பது அக்கிரமமாகும். ...ஸ்தாப விஷயத்தில் முனிசிபாலிட்டியார் அத்தெருவாசிகளின் அபிப்பிராயத்தை உணராது "காடல்தெரு" என்று பெயர் சொ...த்ததானது எக்காரணம்பற்றியோ? வென நாம்கேட்கிறோம். இந்துக்கள் குடியிருக்கும் ஒரு தெருக்கு ஆங்கிலப்பெயர் ஏன் கொடு...பட வேண்டும்? இந்தத் தெருக்குப்பொதுவான பெயரல்லவோ வழங்கப்படவேண்டும்? முனிசிபாலிடியார் தாம்பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்று சாதியாமல் எல்லோருக்கும் பொதுவாகவுள்ள ஒரு பெயரைப் பிரஸ்தாபத்தெருக்கு வைப்பது அவசியமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இவ்விஷயத்தில் சேர்மென் அவர்கள் பொது ஜன அபிப்பிராயத்தை. யனுசரித்து நட...ரென்று நம்புகிறோம். அத்தெருவிலு... ஒரு கனவான் தம் பெயரால் அத்தெ...ழைக்கப்படவேண்டுமென்று வற்புறு...தாகக்கேள்விப்படுகிறோம். பிராமண... பிரிவினரும் பிராமணரல்லாதா... அத்தெருக்குப் பொதுப்பெயர் ...டவேண்டுமேயன்றிக் குறித்த ... பெயராவது அல்லது இந்... ...ாத உணர்ச்சியையுண்டாக்கக் ...யராவது கொடுக்கப்படுதல் ...குறிப்பிடுகிறோம்.

...யார்.

...தேதி கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் ஷோலாப்பூரில் ஒத்துழையாமையைப்பற்றிப் பேசநேர்ந்தபோது, காங்கிரஸ் செய்திருக்கும் ஒத்துழையாமைத் தீர்மானம் தேசத்திற்குத் தீங்குவிளைக்கக்கூடியதென்றும் மெஜாரிடிகட்சியினர் செய்யும் தீர்ப்பை மைனாரிடிகட்சியினர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்வது அசம்பாவிதமென்றும் இதற்கு அக்கட்சியினர் காங்கரஸைவிட்டு விலகிநின்று பிரசாரவேலை செய்து மெஜாரிட்டி கட்சியினரைத் திருப்பலாமென்றும் இவ்வாறு செய்வதுதான் ஒழுங்கென்றும் கூறியுள்ளார். கனம் சாஸ்திரியார் இவ்வாறு பேசுவாரென்று நாம் முன்னரே அறிவோம். ஆனால் நேயர்களுக்கு ஒரு விஷயம் கூறுகிறோம். கனம் சாஸ்திரியார் கூறியபடி அரசியல்வாதிகள் நடப்பார்களானால் கொஞ்சம் வருஷங்களுக்குள் தேசத்தில் அரசியல் இயக்கமே பாழாகிச் சின்னா பின்னமாகி விடுமென்பதில் சந்தேகமில்லை.

கருத்தென்ன?

நாம்சொல்லுவதைக் கொஞ்சம் விளக்கிக் காட்டுகிறோம். மிதவாதிகளில் பலர் காங்கரஸ் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதனின்றும் முன்னரேவிலகிவிட்டார்கள். கல்சத்தாவிசேஷகாங்கரஸ் தீர்மானம் பிடிக்காதபடி காங்கரஸ்காரர்களில் மற்றொரு பகுதியினர் கனம் சாஸ்திரியார் சொல்வது போல் காங்கிரஸினின்றும் விலகிக் கொள்கிறார்களென்றுவைத்துக் கொள்வோம். பிறகு அடுத்த காங்கரஸ்தீர்மானம்பிடிக்கவில்லையென்றுவேறொருபகுதியினர்விலகிவிடுகின்றனர். இவ்வாறேவருஷாவருஷம்கூடும் காங்கரஸில் செய்யப்படும் தீர்மானங்கள் பிடிக்காமல் கொஞ்சம்கொஞ்சம்பகுதியினர் விலகிக்கொண்டு அவரவர்கள் தனிச்சங்கத்தையேற்படுத்திக்கொண்டால்அப்போது காங்கரஸின்கதிதானென்ன? அதன்செல்வாக்கு என்னவாகி விடும்? என்று நாம் கனம் சாஸ்திரியாரைக் கேட்கிறோம். ஒவ்வொரு சங்கத்திலிருக்கும் மைனாரிடி கட்சியினர் மெஜாரிடி கட்சியின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் பிறகு சங்கம் எதற்கு? ஒற்றுமை எதற்கு? ஜனநாயக ஆட்சிமுறையின் கருத்துதானென்ன? ஒருகால் கனம் சாஸ்திரியார் கூறும் ஜனநாயக முறை எத்தேசத்தில் அநுஷ்டானத்திலிருக்கிறதோ? தெரியவில்லை.

துஷ்டயோசனை

மைனாரிடி கட்சியினர் மெஜாரிடி கட்சியினரின் தீர்ப்புக்கு உட்படாமல் வெளியே வந்துவிடலாமென்று கனம் சாஸ்திரியார் சொல்லும் யோசனையை நாம் துஷ்டயோசனையென்றேகூறுகிறோம். இந்திய ஊழியச்சங்கத்திலிருக்கும் மெம்பர்களில் அபிப்பிராய பேதமேற்பட்டால் ஒவ்வொரு மெம்பரும் சாஸ்திரியார் கூறும் அபிப்பிராயத்தைஆதாரமாகக்கொண்டு அச்சங்கத்தினின்றும் விலகிவிட்டால் இந்திய ஊழியச்சங்கத்தின் நிலை எவ்வாறாக விருக்குமென்பதைக் கனம் சாஸ்திரியார் உணரவேண்டுகிறோம். ஒரு மகாசபை அல்லது சங்கத்தின் மெம்பர்களுக்குள் பலமான அபிப்பிராய பேதமேற்பட்டாலும் மெஜாரிடி கட்சியினரின் அபிப்பிராயத்தை மைனாரிடிகட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டுவது ஜனநாயக ஆட்சிமுறை பரவும் தேசங்களில் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. மைனாரிடி கட்சியினர் அச்சங்கத்தினின்று ஓடிப்போகாமல் தேசமெங்கும் பிரசாரவேலை செய்து மெஜாரிடிகட்சியினரைத் திருப்ப வேண்டும். இந்த அனுஷ்டான முறைக்கு மாறாக, ஏதோ மனதில் நினைத்துக் கொண்டு மைனாரிடி கட்சியினருக்குத் துஷ்ட யோசனை சொல்வதானது கனம் சாஸ்திரியார் பதவிக்குத் தகாதென்றே நாம் கூறவேண்டியிருக்கிறது.

திவான் வி பி மாதவராவ்.

கல்கத்தா விசேஷகாங்கரசுக்குப்போய்த் திரும்பி வந்தநாள் தொட்டுத் திவான் அவர்கள் உடம்பு குணமில்லாமலிருந்து வருகிறார்கள். இப்பொழுது நாலைந்து நாட்களாக அவரது தேகம்குணமடைந்து வருவது ஸந்தோஷமாகும். திவான் அவர்கள் வெளியே போகக்கூடாதென்றும் நீண்டநாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் டாக்டர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். இவர் சீக்கிரம் தேகசுகம் பெற நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ்க் கூலிகள்.

ஸிலோனில்தமிழ்க்கூலிகளைக்குடியிறுத்திவைப்பதற்குஸிலோன் கவர்ன்மெண்டார்காவிநிலங்களைக்கேட்டதாகவும், அதைப்பற்றி இந்தியாகவர்ன்மெண்டார் யோசித்துவருவதாகவும் அறிகிறோம். இஃதுண்மையானால் கவர்ன்மெண்டாரின் மனப்போக்கை இந்தியர்கள் முக்கியமாகத் தமிழ் ஜில்லாவாசிகள் மனமாரக்கண்டிக்க வேண்டுவது அவசியம். பொதுவாக இந்தியர்கள் ஸிலோனுக்காகட்டும் மற்றக்குடியேற்ற நாடுகளுக்காகட்டும் போகவே கூடாது, குடியேற்றநாடுகளில் இந்தியர்கள் அனுபவிக்கும் துயரங்கள் போதாவென்று ஒருசால் இந்தியா கவர்ன்மெண்டார் நினைத்திருக்கின்றனரோ? ஸிலோனிலும் மற்ற குடியேற்ற நாடுகளிலுமுள்ள ஐரோப்பியர்கள் பணக் கொழுப்படைவதற்குஇந்தியக்கூலிகள் தானோ போகவேண்டும்? குடியேற்ற நாடுகளில் பல வருஷங்களாகக் குடியேறியிருந்த இந்தியர்கள் குழந்தை குட்டிகள் உள்பட இந்தியாவுக்குத்திருப்பியனுப்பப்படும் போது இன்னும் இந்தியர்களேன் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும்? எக்காரணம்பற்றியும் இந்தியக்கூலிகள் இந்தியாவை விட்டுக்கொஞ்ச வருஷங்கள் வரையில் அதாவது நாம் பிறரால் சரிசமானமாக மதிக்கப்படும் வரையில் வெளிநாடுகளுக்குப் போகக் கூடாதென்று ஒவ்வொருவரும் ஆங்காங்குப் பகிரங்கம் செய்யவேண்டுகிறோம்.

*   *

டாக்டர் ரவீந்திரநாத்தாகூர் ஹாலந்து போய்ச் சேர்ந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

கிராமஉத்தியோகஸ்தர்கள்,

கனம் டாட் ஹண்டருக்கு அறிவித்தவிஷயம்.

சென்னை மாகாணகிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின்பிரதிநிதிகள் சென்னை நிர்வாக சபைமெம்பர்களில் ஒருவராகிய கனம் டாட் ஹண்டரை இம்மாதம் 27ந்தேதி பேட்டிகண்டார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் கனம் மெம்பரிடம் தெரிவித்துக்கொண்டவைகளின் சாராம்சத்தைச் சுதேசமித்திரனின்றும் கீழே பிரசுரித்திருக்கிறோம்:—

கண்ணியத்திற்குத்தகுந்த வேலையில்லை.

கிராம முனிசீப்புகளுக்குச் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க முடியாதென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து விட்டனர். இது நியாயமல்ல. அவர்கள் அலவுன்ஸ் வாங்கிக்கொண்டு கௌரவ உத்தியோகஸ்தர்களாக இருந்துவர வேண்டுமானால் கிராமப் பெரியதனக்காரர்என்கிறயோக்கியதைக்குத் தகுந்த அந்தஸ்தைஏற்படுத்தி அவர்களை கண்ணியமாநடத்திவர வேண்டும். கௌரவ உத்தியோகங்களை அவர்கள்ஏற்றுக்கொண்டதற்காகசாதாரண பிரஜைகள் என்கிற ஹோதாவில் அவர்களுக்குள்ள உரிமைகளைக் குறைத்து விடக்கூடாதென்று கிராம முன்சீப்புகளின் சார்பாக நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். ஆயினும் கவர்ன்மெண்டார் கிராம முன்சீப்புகள் லோகல் போர்டுகள் முனிசிபாலிட்டிகள் யூனியன்கள் இவைகளில் மெம்பர் ஸ்தானம் வகிக்க அருகதையிலாமல் செய்திருக்கிறார்கள். இப்பொழுது ஆலோசனையிலிருந்து வரும் கிராமப்பஞ்சாயத்து மசோதாவிலும் அவர்களுக்குமற்றொருவிதத்தில் அனருகதை கற்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கண்ணியத் திற்குத்தகுந்த வேலைகள் கொடுக்கப்படுவதில்லை

பொறுப்பு அதிகம்

கிராமாந்தரங்களுக்கு அடிக்கடி முகாம்வரும் எண்ணிறந்த உத்தியோகஸ்தர்களைத் திருப்திசெய்யவே அவர்களுடைய காலம் கழிபடுகிறது. அவர்கள் கையிலிருந்தும் அதிகப்பணம்செலவழிகிறது. அற்ப சங்கதிகளுக்காகக்கூட அடிக்கடி ரிவினியூடிபார்ட்மெண்டிடமிருந்து அவர்களுக்கு சம்மன்கள் வந்த மயமாகவே இருக்கின்றன. தவிர கிஸ்தி வசூல் விஷயத்தில் அவர்களுக்குள்ள பொறுப்போ சொல்லவேண்டியதில்லை. இந்த வேலைகளைச்செய்வதற்கு அவர்கள் கையைவிட்டுச் செலவு பிடிக்கிறதென்பது பெரிய உத்தியோகஸ்தர்களுக்குத்தெரிந்த சங்கதிதான். கிஸ்தி வசூல் வேலையானது கௌரவத்தையாவது மதிப்பையாவது உண்டுபண்ணுவதல்ல. கிஸ்தி வசூல் செய்கிறதென்றால் எந்தத்தேசத்திலும் பொதுஜனங்களுக்கு ஒரு மாத்துக் கம்மிதான். கிஸ்திவசூலில் தொந்திரவும்அதிகம்; கஷ்டமும் அதிகம்; ஆகவே அந்த வேலையைச்செய்து வருவதற்குக் கிரமமான சம்பளம் கொடுத்தேதீரவேண்டும்.

ஏற்கனவே அனுப்பியுள்ள விஞ்ஞாபனங்களில் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதாரமாக எடுத்துச்சொன்ன காரணங்களை மீண்டும் எடுத்துச் சொல்லப்போவதில்லை. அல்லது அற்ப சங்கதிகளால் அவர்கள் கவர்ன்மெண்டாரின் கவனத்தைச் சிதற விட்டு விடப்போவதில்லை. அடியிற்கண்ட குறைகள் உடனே நிவர்த்திக்கப்பட வேண்டும்.

(1) ஆதிகாலத்தில் கிராம முன்சீப்புகளுக்கு ஏற்பட்ட சம்பளத்திற்கு இப்பொழுது மதிப்புக் குறைந்து விட்டதால், அவர்களுக்குக் கொடுபடும் தொகையைச்சம்பளமாகப் பாவித்தாலும் சரி, அலவுன்ஸாக வைத்துக் கொண்டாலும் சரி, உயர்த்தித்தர வேண்டும். ஆதியில கிராம முனிசீப்புகளுக்கு ஏற்பட்ட வேலைகள் இப்பொழுதுகுறைந்து விடவில்லை. இனி அவர்களுக்கு வேலை குறையப்போகிறதென்பதற்காக இப்பொழுது அவர்களுக்குக் கிரமமாக கிடைக்க வேண்டியதை விட்டுக் கொடுக்க நியாயமில்லை

(2) கர்ணங்களுக்கு சமீபத்தில் செய்துகொடுக்கப்பட்டிருக்கும் சம்பள உயர்வு அவர்களுக்காவது கவர்ன்மெண்டாருக்காவது திருப்தி தருவதாக இல்லை. இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் காலக்ஷேபத்திற்கும் கட்டாது. அவர்கள் தங்களுடைய வேலைகளைத் திறமையாகச் செய்து வர கவர்ன்மெண்டாருடைய நோக்கப்படி அவர்களுக்கு இந்தச்சம்பளம் திருப்தி தருவதாகவும் இருக்க வில்லை. கர்ணங்கள் சதாகாலமும் கவர்ன்மெண்டு வேலையையே கவனித்து வரவேண்டுமென்றும், அவர்கள் கவர்ன்மெண்டாராலேயே பிசகென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிற இதர தூண்டுதல்களுக்கு ஆளாகாமலிருக்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் எதிர்பார்ப்பாராயின், அவர்களுடைய சம்பளம் காலக்ஷேபத்திற்குக் கட்டுவதாக இருக்கவேண்டும். மேலும் அந்த வேலையைப் பார்த்துவர அவர்களுக்குக்கல்வி ஞானமும் அதிகம் வேண்டியிருக்கிறது; பயிற்சியும் தேவையாக இருக்கிறது; இதர கிராமங்களிலும் அவர்களுக்கு யோக்கியத்தை இருக்க வேண்டியிருக்கிறது.

சாதாரணமாக இதர கவர்ன்மெண்டு உத்தியோகங்களில் இருந்து வருகிறவர்களுக்குக்காலக்கிரமேண ஏற்படக்கூடிய சௌகரியங்களுக்கும் அவர்கள் பாத்திரமானவர்களே. ஆகவே அவர்களுக்குக்காலக்ஷேபத்துக்குக் கட்டும்படியான சம்பளத்தை ஆரம்பத்தில் ஏற்படுத்தி, நாளடைவில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவைக்குக்கட்டும்படியாக அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொண்டு போகவேண்டும். மேலும் அந்திய காலத்தில் அவர்கள் தங்களையும் தங்களுடைய குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக பிராவிடெண்டு பண்டு ஏற்படுத்தவேண்டும். கடைசியாக கிராம முனிசீப்புகளுடைய அந்தஸ்தையும் சம்பளத்தையும்உயர்த்தவேண்டும். கர்ணன்களுடைய சம்பளத்தைமட்டும் உயர்த்தி முனிசீப்புகளுடைய சம்பளத்தை உயர்த்தாதிருப்பது இருவருக்கும் விரோதத்தை உண்டு பண்ணுவதாகும்.

இனாம் ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்தாமல் விட்டுவிட்டது நியாயமல்ல. ஆகவே ரயத்வாரி கிராம உத்தியோகஸ்தர்களைப் போலவே இவர்களுக்கும் சம்பளம் கொடுபடவேண்டுமென்றும், இவ்வித சமத்துவமான அந்தஸ்து அவர்களுக்கு ஏற்படுவதற்குக் கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நகர்புறங்களில் காலக்ஷேபச் செலவு அதிகமாயிருப்பதால் அங்கே வேலைபார்க்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குக்குறைந்தது மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாவது சம்பளம் கொடுக்கவேண்டும்.

கிராமமுனிசீப்புகள் சம்பள உத்தியோகஸ்தர்கள் என்று காரணம் சொல்லி முனிசிபாலிட்டிகள் லோகல் போர்ட்டுகள் சட்டசபை இவைகளுக்குத்தெரிந்தெடுக்கப்பட முடியாமலும்; புதிய மசோதாப்படி கிராமபஞ்சாயித்துகளிலும் தங்களுடைய உத்தியோக ஹோதாவில் மெம்பராக இருக்கமுடியாமலும் செய்திருக்கும் அநீதத்தைத்தங்களுடைய அறிவிப்புக்குக்கொண்டு வருகிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகையானது பூராகாலமும் கவர்ன்மெண்டாரிடம் வேலைசெய்வதற்காக ஸிவில் சர்விஸ் ரெகுலேஷன்படி கொடுபடும் சம்ப[illegible]ரும் கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டிருக்கையில் சட்டசபை எலெக்ஷன் விஷயமாக "உத்தியோகஸ்தர்கள்" என்கிற பதத்திற்கு ஆலோசனை சபையுடன் கூடிய கவர்னர்ஜெனரல் செய்திருக்கும் வியாக்யானத்தின் தத்துவம் அவர்கள் விஷயத்திலும் செல்லுபடியுள்ளதாகவேண்டும். ஆகவே இனியாவது கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகள் மசோதா 13வது செக்ஷன் முதலாவது பிரிவையும் 54வது செக்ஷன் முதலாவது பிரிவையும் அதை அனுசரித்த இதர [illegible]களையும், ஜில்லா முனிசிபாலிட்டிகள் சட்டத்தில் அதைப்போன்றபிரிவுகளையும் திருத்தி இந்த ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்களில் அவர்களுக்குச்சாதாரணபிரஜைக்குரிய அந்தஸ்தும் உரிமையும் கிடைக்கச்செய்யும்படிக்கும் கிராம பஞ்சாயத்துகள் செம்மையாக நடந்து அபிவிருத்தியுற்று வருவதற்கு கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய உத்தியோக ஹோதாவில் பஞ்சாயித்[illegible]ம்பர்களாக இருக்கும்படி கிராமப்ப[illegible]த்து மசோதா 6வது செக்ஷன் மு[illegible] பிரிவைத் திருத்தும்படிக்கும் [illegible]ள்ளுகிறோம்.

---

*

இம்மாதம் 21ந் தேதி[illegible]
வாரத்தில் சென்னைமாகாண[illegible]
ராவினாலும் 433 பேர் பி[illegible]
போயிருக்கிறார்கள்.மற்ற[illegible]
மாணம் குறைந்திருக்கி[illegible]

அங்கும் இங்கும்

ஜீ. ஐ. பி. ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. ரெயில்வே கம்பெனியாருக்குத் தொழிலாளர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

*   *

பம்பாய்த்தபால் சேவகர்கள் வேலை நிறுத்தம் செய்வதைப் பார்த்துப் பம்பாய் பி. ஓ. ஸி. எண்ணெய்க்கம்பெனித் தொழிலாளர்களும் சில மில் தொழிலாலர்களும் பம்பாய் கார்ப்பொரேஷன் தோட்டக் கூலிகளும் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

*   *

நாகப்பூரில் கூடும் நாஷனல் காங்கரசுக்கு ஸ்ரீயுத அரவிந்த கோஷ் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று பஞ்சாப் மாகாணகாங்கரஸ் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கின்றனர். ஒரு சமயம் ஸ்ரீயுதகோஷ் ஏற்றுக் கொள்ளாமற் போனால் சேலம் ஸ்ரீமான் ஸி. விஜயராகவாசாரியரையேனும் மிஸ்டர் ஸி.ஆர். தாஸையேனும் தெரிந்தெடுக்கவேண்டுமெனச் சிபார்சு செய்திருக்கின்றனர்.

*   *

பிரஞ்சு குடியரசுக்கு மிஸ்டர் எம். மிலிரெண்டு பிரிஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

*   *

சென்னை மாகாணத்தில் கல்வி ஸெர்விஸ் உயர்தர உத்தியோகங்களுக்கு உத்தியோகஸ்தர்களைக் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சுசெய்ய ஒரு ஸெலக்ஷன் கமிட்டியார் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இக்கமிட்டியில் கனம் கே. ஸ்ரீநிவாசய்யங்கார், மெஸர்ஸ் மெக்பெயில், எச். எஸ். டங்கன் கல்வி இலாக்காத் தலைவர் கான்பகதூர் முகமத் ஹபிபுல்லா சாயபு முதலிய ஐவர்கள் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டிக்கு இரண்டுவருஷம் உயிருண்டு. கல்வி இலாக்கா[...] தலைவர் இதற்குக் காரியதரிசியாக வேலை பார்ப்பார்.

*   *

பூனா நியுகாலேஜில் பி. ஏ. ஸீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த திலகர்பெருமானின் குமாரரான ஸ்ரீமான் ஸ்ரீதர பல்வந்தராவ் திலகர் அக்காலேஜினின்றும் விலகிக் கொண்டு காலேஜ் பிரின்ஸிபாலுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் [...]திில் காங்கரஸ் செய்திருக்கும் ஒத்துழையாமை [...]மானத்திற்கு என்ன பாடு பட்டாலும் தாம் [...]படிய வேண்டுவது அவசியமென்றும் அஃ[...]றே கௌரவமானதென்றும் தம் தகப்பனார் [...]ருப்பாரேயானால், அவரும் ஒத்துழையா[...]தரித்துத் தம் செய்கையை சிலாகித்தி[...]றும் குறிப்பிட்டிருக்கிறார்.

*

[...]ங்கரஸ் அக்கிராசனபதவிக்கு [...]ாங்கரஸ் கமிட்டியார் ஸ்ரீமா[...] [...]ி, காந்தி, விஜயராகவாசாரியார் அரவிந்த கோஷ், ஸி. ஆர். தாஸ் இந்த ஐந்து கனவான்களையும் சிபார்சு செய்திருக்கிறனர்.

*   *

'சபீர்' என்னும் பெயர் கொண்ட ஓர் உருது தினப் பத்திரிகை மிதவாதிகளின் கட்சியைப் பலப்படுத்த லட்சுமணபுரியில் ஏற்படுத்தப்படுமென்றும் அதற்கு இந்திய ஊழியச் சங்கத்து மெம்பர் ஒருவர் ஆசிரியராக விருப்பாரென்றும் தெரிகிறது.

*   *

எல்லா இந்திய சுய ஆட்சி சங்கம் இப்போது சுயராஜ்ய சபையாக மாற்றப்பட்டிருக்கிறது. இதன் நோக்கங்களும் விதிகளும் புதிதாகச் சிற்சில மாறுதல்களுடன் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பற்றி ஆலோசிக்க அக்டோபர் மீ 3ந் தேதி பம்பாயில் ஒரு கூட்டம் கூடும். இதன் விவரங்கள் பின்னால் அறிவிக்கப்படும்.

*   *

லார்ட்வில்ஹா இம்மாதம் 25ந்தேதி பம்பாய் வந்துசேர்ந்தார். ஸிம்லாவுக்குப்போய் இராஜபிரதிநிதியைக்கண்டு பேசியபிறகு அவர் பீகார்மாகாண கவர்னர் பதவியை ஒப்புக்கொள்வரென்று தெரிகிறது.

*   *

லண்டனில் பிரசுரமாகும் முஸ்லிம் அவுட்லுக் என்ற பத்திரிகை இந்தியாவுக்கு வராமல் தடுக்கப்பட்டிருக்கிறது.

*   *

கனம் பண்டிட் மதன்மோகன் மாளவியா சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கக்கூடாதென்றும் காங்கரஸின் அதிகாரத்தைக் குறைக்கக்கூடாதென்றும், ஆகவே அவர் சட்டசபைக்கு நிற்பதினின்றும் விலகி எல்லோருக்கும் வழிகாட்ட வேண்டுமென்றும் சில காங்கரஸ் வாதிகளால் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

*   *

அக்டோபர் மீ 22 23ந் உ களில் கும்பகோணத்தில் கூடும் எலிமெண்டரி உபாத்தியாயர்கள் மகாநாட்டிற்குத் திவான். வி. பி. மாதவராவ் அக்கிராசனம் வகிப்பரென்றும் சென்ற வாரம் ஸமரஸபோதினியில் வெளியிட்டபடி கனம் வி. கே. இராமானுஜாச் சாரியார் அக்கிராசனம் வகிக்க மாட்டாரென்றும் காரியதரிசி நமக்கு அறிவிக்கிறார்

*   *

மன்னார்குடி தாலுக்கா எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களின் கூட்டம் அக்டோபர் மீ 2ந் உ காலை 9மணிக்கு இந்து எலிமெண்டரிபாடசாலையில் கூடும்.

*   *

நாகப்பூர் உபசாரணைக் கூட்டக்கமிட்டியாரும் ஸ்ரீமான்கள் ஸ்ரீயுத அரவிந்த கோஷ், சக்கரவர்த்தி விஜயராகவாசாரியார் முதலியோர்களைச்சிபார்சு செய்திருக்கின்றனர்.

உலகப் பிரசித்தி பெற்ற

சாஹெபியா மருந்துசாலை.

குணத்தால்உயர்ந்தது, விலையில் நயமானது, உண்மைக்கோர் அத்தாக்ஷி, உலகின் பெருங்காக்ஷி.

காமாஞ்சித சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

உத்தரவாதமுள்ள சத்தியமருந்து.

இந்த அருமையான லேகியத்தைப் பற்றி நாம் அதிகம் புகழத் தேவையில்லை. அனுபவிப்பவர்கள் நன்கு அறிவார்கள். இது மகான்கள் செய்துவந்தமுறையை அனுசரித்து அனேகவித்துக்களாலும் மிசிரிந்தினுசுகளாலும்பூவகையருக்களுடன் தங்கரேக் வெள்ளிரேக்குகளும் கலந்து நல்ல பாகத்துடன் தயார் செய்துள்ள இ[...] குணங்களாவது தாய்வயிற்றிலிருந்து உற்பத்தியான வியாதியல்லாத மற்றதெல்லாம் ஆண்டவனருளால் சுகப்படுமென்று நாம் திண்ணமாய்ச் சொல்லுகிறோம். வாலிபதிசையில் [...] போன தாதுவை உற்பத்தியாக்கி மூளைக்கும் நரம்புகளுக்கும் வலுவை ஏற்றி ஜீரணசக்தியையும் மனவுல்லாசத்தையும் சரீரபுஷ்டியையும் தந்துஎந்தக் காலத்திலேயும்சந்தோஷத்தைத்தரக்கூடியது இந்த லேகியம்பக்குவப்படி எந்தக் கம்பெனியாரும் செய்யமாட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறோம்.

இதன் விலை.

40-நாள் 80-வேளை மருந்து டப்பி 1-க்கு		ரூ	10—0—0
20-நாள் 40-வேளை	ஷை	ரூ.	5—4—0
10-நாள் 20-வேளை	ஷை	ரூ.	3—0—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

தேவைப்பட்டவர்கள் தாங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் விளம்பரம் நோட்டீசுகளுக்கு கிரயில்லாமலும் போஸ்ட் செலவு இல்லாமலும் இனாமாக அனுப்பப்படும். உடனேநோட்டீசுகளுக்கு எழுதுங்கள்.

அ. அ சாயபு.

சாஹெபியா மருந்துசாலை,
பரங்கிப்பேட்டை,
தென்னார்காடு ஜில்லா.

இந்து சாதனம்
("HINDU ORGAN")

இது யாழ்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆங்கிலத்திலும் தமிழிலும் நடாத்தப்பெற்று வருவது ஆங்கிலம் வாரம்இருமுறையும், தமிழ்வாரமொருமுறையும் பிரசுரமாகும், 1889ம் ஆண்டு செப்டம்பர் மாசம்(32 வருடங்கட்குமுன்) ஆரம்பமாய் இடையீடின்றி நடைபெற்று வருகின்றது. இலங்கையில் இந்துக்களுக்குரிய பத்திரிகை இதுவொன்றேயாம். இதன்கண் சைவசித்தாந்தவிஷயமான வியாசங்களும், இலங்கை அரசியலைக் குறித்த வியாசங்களும், இலங்கை இந்தியா வாசிகளின் ஈடேற்றத்திற்கான வியாசங்களும், உள்ளூர் வெளியூர்ப் புதினங்களும், மேலைத் தேசதந்திச் சமாச்சாரங்களும் சற்போதம் பயக்கும்கடிதங்களும் இலங்கை இந்தியாவிலுள்ள பிரபல வர்த்தகர்களின் விளம்பரங்களும் இன்னோரன்ன பிறவும் காலந்தோறும் வெளிவருவன.

வருடக்கிரயம் (முற்பணம்)

	உள்ளூர்	வெளியூர்
தமிழ்ப்பிரதி	2–80	4–70
ஆங்கிலப்பிரதி	5–65	9–40
இருபிரதிகளும்	7–50	11–25

மாதிரிப் பிரதிகள் வேண்டுமானால் அனுப்பப்படும்.

குழந்தைகளின் ஆஸ்பத்திரி.

ராவ்பகதூர் டாக்டர் ஸி. பி. ராமராவ் எம். டி

நமக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.

சென்னை நகரில் அநேகம் ஆஸ்பத்திரிகளும் ஔஷத சாலைகளும் இருக்கின்றன. அவற்றுள் எழும்பூர், ராயபுரம் திருவல்லிக்கேணி முதலிய விடங்களில் பிரஸவ ஆஸ்பத்திரிகளும், இவையன்றி ஒரு கண் வைத்திய ஆஸ்பத்திரியும் பைத்தியக்காரர்களுக்கென்று ஒரு ஆஸ்பத்திரியும், குஷ்டரோகிகளுக்கென்று ஒரு ஆஸ்பத்திரியு மிருக்கின்றன. இவைகளெல்லா மிருந்தும் குழந்தைகளின் ரோக சிகிச்சைகளுக்குச் சென்னையில் இது வரையிலும் யாதொரு தகுந்த ஏற்பாடும் செய்யப்படாமல் இருப்பது பெருங்குறையா யிருக்கிறது

குழந்தைகளே தேசத்திற்கு அஸ்திவாரம்

மகா யுத்தத்துக்கு ஆள் சேர்க்குங் காலையில் ஒவ்வொரு தேசத்தினரும் அயல் தேசத்தாருடன் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்களாலியன்ற மட்டும் சரீர வலிமை படைத்தவர்களைச் சம்பாதித்துச் சேர்த்தார்கள். சரீர வலிமையை யுண்டு பண்ணக் குறுக்கு வழி ஒன்று மில்லை யென்றும் தேசத்தில் பெரும்பான்மையும் ஆரோக்கிய திடகாத்திர சரீரிகளாய் மனிதர்கள் அமைய வேண்டுமானால் அதற்கு அஸ்திவாரத்தை இளம்பிராயத்திலேயே போட்டுக்கொள்ள வேண்டுமென்றும், சரீர ஆரோக்கிய போதகர்களும் இராஜ தந்திர நிபுணர்களும் ஒப்புக்கொண்ட விஷயமா யிருக்கிறது. இன்னும் சொல்வதென்ன வெனில், சிசுவைப் பற்றிய கவலையை அதன் ஜனனத்துக்கு முந்தியே எடுத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில் பெரும்பாலும் குழந்தைகளின் அங்கக் குறை முதலிய குரூபங்கள் யாவும் கற்பப்பையில் கருவிர்த்தி யடையும்பொழுதே உண்டாகின்றன. இவ்வாறுண்டாகும் குறைகளை நிவர்த்திக்கக் கருதி முன்னேற்ற மடைந்த தேசங்களி லெல்லாம் பிரஸவத்துக்கு முந்தியே சர்ப்பிணிகளைக்கவனித்துப் பாதுகாக்க ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நம் நாட்டு ஸ்திரீகளோ அடிக்கடி குறைப் பிள்ளை பெற்று வருந்துகிறார்கள். அவர்கள் தேர்ந்த டாக்டர்களை அழைத்துக் காட்டி வைத்தியம் செய்துகொள்ளாம லிருக்கிறார்கள் குழந்தைகளின் நேத்திரப் பார்வை குன்றிபோவதற்குக் காரணம் பெரும்பாலும் பிரஸவ காலத்தில் தாயின் வயிற்றிலிருந்து வரும் அழுக்குகளைத் துடைக்காமலிருப்பதாலும் அவைகள் குழந்தையின் கண்ணில் படுவதாலு மாகும். மேலும் கர்ப்பஸ்திரீகளின் சங்கியைக்குத் தக்கவாறு தேர்ந்த மருத்துவச்சிகள் தேசத்தில் இல்லாமலிருப்பதும் மற்றொரு காரணமாகும்

மரணத்துக்குக் காரணம்;

சென்னை நகரில் விசேஷ சிசு மரணத்துக்குக் காரணம் மருத்துவச்சிகளென வழங்கும். படிப்பில்லாத அம்பட்டச்சிகளின் அறியாத்தனமும் சரீர சுத்தமின்மையுமே யாகும். படிப்பில்லாத மருத்துவச்சிகள் பிரஸவம் நடத்தும்பொழுது அறியாத்தனத்தால் தாய்களுக்கு உண்டு பண்ணும் தீங்குகளால் அவர்களை தீராநோய்களுக்காளாக்கி விடுகிறார்கள். மருத்துவச்சிகள் அவர்கள் கடமை இன்னதென்று அறியாமலிருப்பதொரு புறமிருக்க, பிரஸவத்துக் கிருக்கும் ஸ்திரீகள் தங்கள் கடமைகளைக் கவனிக்கிறார்களோ வெனின் அதுவு மில்லை. எல்லாம் முட்டிப்போன பிறகுதான் டாக்டர் உதவியைத் தேடுகிறார்கள். வெள்ளம் வரும் முன் அணை போட வேண்டுமென்று சொல்லுவது மற்றெல்லா விஷயங்களைக் காட்டிலும் இந்தப் பிரஸவ விஷயத்தில் மிகவும் அவசியமாகக் கவனிக்க வேண்டியதாகும். படித்தவர்கள் கூட பிரஸவம் கடைசி நிமிஷம் வரையில் மருத்துவச்சிகளை அழைப்பதில்லை. இதற்குக் காரணம் டாக்டருக்குப் பணம் கொடுத்து மருத்துவச்சிக்கும் பணம்கொடுக்கஇயலாமையேதானென்பது நன்றாகத் தெரிகிறது. இது காரணம் பற்றி சென்னையிலும் ஒவ்வொரு முனிஸிபாலிட்டியிலும் பல பாகங்களில் விசேஷமாகப் பிரஸவ ஆஸ்பத்திரிகளும் பிரஸவத்துக்கு முந்தியே கர்ப்பிணிகளைக் கவனித்துப் பார்த்து வைத்துக் கொள்ளும் ஸ்தாபனங்களும் ஏற்பட வேண்டியது அவசியமாகும். இந்நோக்கத்துடன் இப்பொழுது சென்னையின் தெற்குக் கோடியில் ஓர் விஸ்தாரமான பங்களாவில் குழந்தைகள் ஆஸ்பத்திரியொன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சென்னையின் வடபாகத்திலும் மத்திய பாகத்திலும் சகல சாதனங்களுடன் நன்கமர்ந்த ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. தென்பாகத்தில் ஒரு தகுந்த ஔஷதசாலை கூட இல்லை.

தாதிமார்களின் பஞ்சம்

விசேஷ கருணையுடனும் அனுதாபத்துடனும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இவ்வாஸ்பத்திரிக்குக்கவர்னர் அவர்கள் ரூ1000 கொடுத்துதவியிருக்கிறார், மற்றுமோர் உதார குண சீலரிடமிருந்து அதே சமயத்தில் ரூ-13,000 க்கு ஒரு செக்கு கிடைத்திருக்கிறது. தாதிமார்களைத் தயார் செய்யும் பாடசாலையும் இந்தக் குழந்தை ஆஸ்பத்திரிக்குச் சம்பந்தமான ஸ்தாபனமாகும். நோய் காலத்தில் வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உபகாரமாயிருக்கக் கூடிய சரியான தேர்ச்சியடைந்த தாதிகள் வேண்டிய பேர் இருக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். இது வரையில் இந்த விஷயத்தை எவரும் கருத்துடன் கவனித்தா ரில்லை. ஏதோ சிற்சில தாதிமார்கள் அகப்படக் கூடியவர்களெல்லோரும் ஆங்கிலோ இந்தியர்களாயிருக்கிறார்கள். எண்ணிக்கையில் மிகக் குறைவாயுள்ள இந்த ஜாதி தாதிமார்கள் மட்டும் சென்னையிலுள்ள ஏராளமான ஜனத்தொகைக்கு எப்படிப்போதும்? மேலும் ஸர்க்கார் பிரஸவ ஆஸ்பத்திரியிலும் மற்றுமுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளிலும் இதுவரையில்தயாராகிவெளி வந்திருக்கும் தாதிமார்கள் போதா, கௌரவமான குடும்பங்களிலுள்ள பாலிய விதவைகள் இந்தத் தாதித்தொழிலைக் கைப்பற்றவேண்டும்.

அவர்கள் திடீரென்று வழக்கங்களையும் அனுஷ்டானங்களையும் மாற்றும்படி எதிர்பார்ப்பது கூடாத விஷயமாதலால் ஸர்க்கார் சம்பந்தமில்லாத பிரைவேட் ஹாஸ்பிடல்கள் ஏற்படவேண்டியது அவசியமாகின்றது. இந்த ஆஸ்பத்திரியிலமரவேண்டிய டாக்டர்கள் இந்திய ஸ்திரீகளின் நடை உடை பழக்கங்கள் அறிந்தவர்களா யிருக்க வேண்டும். லேடி வில்லிங்டன் குழந்தை ஆஸ்பத்திரி என்று ஏற்பட்டிருக்கும் இவ்வாஸ்பத்திரியே இவ்விஷயத்திற்காக அமைந்த ஆஸ்பத்திரியாகும். உத்தியோகத்திலிருந்து பென்ஷன் பெற்றவர்களும் பிரைவேட் டாக்டர்களுமாகப் பத்துப் பன்னிரண்டு டாக்டர்கள் இந்த ஆஸ்பத்திரியில் வைத்தியர்களாகவும் ஸர்ஜன்களாகவும், உபாத்தியாயர்களாகவும் இலவசமாக உழைக்க முன்வந்திருக்கிறார்கள். தமிழில் சரீர தத்துவ சாஸ்திரம் சுகாதார சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், தொத்து வியாதிகளின் சிகிச்சை முறை ஆபத்துக்காலங்களில் பிரதம உதவி தாதிகளின் அலுவல்கள் முதலிய விஷயங்களைப்பற்றி யெல்லாம் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தங்களைக்கொண்டுவிளக்கிக்காட்டிபோதிக்கவேண்டும், தற்போது இந்தஆஸ்பத்திரியில் 10 பேர்கள் ஒருஅனுபோகசாலியான லேடி சப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் மேல்பார்வையில் கற்பிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த ஆஸ்பத்திரியை ஏற்படுத்தினவர்களின் நோக்கம் முற்றும் நிறைவேறுவதற்கு விசேஷ பணசகாயம் வேண்டும். இத்தகைய முக்கியமான தர்மகா[illegible]
யத்தை நன்குணர்ந்து விசேஷமாகப் பொரு[illegible]
தவி செய்யக்கூடிய தனவான்கள் தென்னிந்[illegible]
வில் இல்லாமற்போகவில்லை. ஆனால் அ[illegible]
பட்ட தனிகர்களெல்லோரும் தமக்குத்தா[illegible]
இந்த விஷயத்தை அறிந்து கொள்[illegible]
ன்று நினைக்க இடமில்லை. ஆதலின் [illegible]
த்தில் கவலையுடையவர்கள் தாங்கள்[illegible]
செய்ய இயன்றாலும் இயலாவிட்ட[illegible]
செல்வாக்கை மனப்பூர்வமாய்ச்செ[illegible]
னோ அல்லது தங்கள் நண்பர்க[illegible]
ல் மதிப்புவைத்துள்ள எந்த த[illegible]
டாகிலும் பணவுதவி தேடிக்[illegible]
ளுக்கு அது அழியாப் புக[illegible]
இல் சந்தேகமில்லை.

பேபர் பாதுஷாவின் உபதேசம்

முஸ்லிம்கள் கவனிக்க.

பேபர் பாதுஷா அவர்கள் கோவதை (பசுக்கொலை) கூடாதென்று ராஜ்யத்தில் திட்டம் செய்திருந்தார். பாதுஷா வின்விருப்பப்படியே ராஜ்யத்தில் பசுக்கொலைகள் செய்யப்படவில்லை. பசுக்கள் ஒவ்வொரு வீட்டிலும் அன்பாகவைத்து வளர்க்கப்படவேண்டுமென்று பகிரங்கம் செய்ததின்பேரில், ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒரு பசுவை வைத்துக்காப்பாற்றி வந்தாரென்றும், அக்காலம் தேசத்தில் தேனும்பாலும் கலந்தொழுகியதென்றும் சரித்திரக்காரர்கள் கூறுகின்றார்கள். போபால்பீகம் ராஜ்யத்தின் அரண்மனைப் புஸ்தகசாலையில் ஓர் அரிய கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த நம்பிக்கையுள்ள கடிதம் மௌலானா அரிப் உஸ்சேன் ஹாஸ்மி என்பவரிடமிருக்கிறது. இக்கடிதம் இதுவரையில் ஒருவருக்கும் தெரியாதென்று சொல்லப்படுகிறது. அக்கடிதம் என்னவென்று ஜனங்கள் வெகு ஆவல்கொள்வார்கள். பேபர் பாதுஷா தம் குமாரராகிய ஹுமாயூனுக்கு ஓர் அந்தரங்கக் கடிதம் தம் கையால் எழுதி, அதில் ராஜ்யம் செழித்திருக்கவும், நீடித்திருக்கவுமான வழியைக் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக்கடிதத்தின் அசல் நகல் பின்வருமாறு :—

எனது பிரிய குமாரனே !

உனக்கு இந்த ராஜ்யத்தையளித்த கடவுளுக்கு எனது வந்தனம். இந்த இந்திய ராஜாங்கத்தில் பலவிதமான ஜாதி தர்மங்கள் உள. ஆகையால் நீ சுத்தமனதுடன் உன்னுடைய சுயதர்மத்தையே பாராட்டாமல் மற்றுமுள்ள எல்லாத் தர்மங்களையும் அந்தந்த ஜாதி தர்மக்கொள்கைகளுக்கு யாதொரு விரோதமில்லாமல்நடந்துகொள். இந்துக்கள் மனதில் உன் ராஜ்யத்தைப்பற்றி நல்லெண்ணமும் விசுவாஸமுமிருக்கவேண்டுமானால், உன் ஆளுகைக்குட்பட்ட[illegible]ல்லையிலுள்ள கோயில்களையும் பூஜாஸ்[illegible]களையும் காப்பாற்று. அவைகளுக்குஉபத்திரவம் நேராமல் பார்த்துக்கொள். எல்லா[illegible]ற்றிலும் முக்கியமாகப் பசுவதை எங்கேனும் ஏற்பட்டால் அதை உடனே நிறுத்திவிடு. நீ பசுக்களை ரட்சிக்கிறவனென்று ஏற்பட்டுவிட

டால் உனக்கும் பிரஜைகளுக்கும் சுகமும் சமாதானமும் உண்டாகும். இதை நீ மனதில் நிச்சயம் செய்துகொள். நமது இஸ்லாம் தர்மத்தில் நிற்கவேண்டும். அது குரூரநடத்தையால் விருத்திபடையாது. சியா சுனி என்ற இரண்டு விதப்பிரிவைப்பற்றி அதிகமாகப் பாராட்டாதே. இஸ்லாம் மதத்தில் ஒற்றுமையில்லையென்று எதிராளிகள் நினைக்கும்படி நடந்துகொள்ளாதே. உதாரணமாக எப்படிச் சரீரத்தில் தத்துவங்கள் நிதானமாகவிருக்கும்போது யாதொரு ரோகம் ஏற்படவில்லையோ அப்படிப் போல் தேசத்திலுள்ள ஜாதிகள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்ந்துவரும்படி ராஜ்யபரிபாலனம் செய்.

(ஒப்பம்.) பேபர் பாதுஷா.

இக்கடிதத்தினின்று பேபர் பாதுஷா பசுக்கொலை கூடாதென்று வற்புறுத்தியிருப்பதும் பசுக்கள் வளர்க்கப்படவேண்டுமென்று கூறியிருப்பதும், இந்து முஸ்லிம் ஒற்றுமையை விருத்தி செய்யப்படுவது அவசியமென்பதும் தெரியவரும், இக்கடிதம் புனாவில்வெளிவரும் கேசரியின் 17-8-20 ந்தேதி பத்திரிகையினின்று ஓர் அன்பரால் மொழிபெயர்க்கப்பட்டது.

காகித அட்டைகள் செய்தல்

கல்கத்தா "காபிடல்" என்னும் பத்திரிகையில் ஓர் இந்திய வியாபாரி எழுதுகிறார்.

ஜப்பானில் சுமார் இருபத்தைந்து வருஷங்களாகக் காகிதஅட்டை செய்யும் தொழில் விருத்தியடைந்துவருகிறது. மரக்கூழ்கள் காகிதம்செய்வதற்குமல்லாமல் மற்றக்காரியங்களுக்கும் உபயோகப்படுகின்றன. மரக்கூழினின்று எடுக்கப்படும் நாரினால் செய்யப்படும் பட்டுகளை இக்காலத்தில் அனேகர் உபயோகித்து வருகின்றனர். சிலர் காகிதக்கூழையே மரத்திற்கும் இரும்புக்குச் சமமான உறுதியுள்ளதாகவும் கெட்டியாகவும் செய்யலாமென்று கருதுகின்றனர். மழைபெய்தால் சுவர் நனையாதபடி அதன் மீது பூச்சுப் பூசுதல் ஓடுகளுக்குப் பதிலாகக் கூறைமீது போடுதல் காகிதப்பெட்டிகள் செய்தல் முதலிய வேலைகளுக்குக் கூட உபயோகப்படுத்துகின்றனர். இன்னும் காகிதப்[illegible]ள், கயிறுகள், ட்வைன்கள், குடைகள் முதலிய சாமான்களை ஜப்பானியர்கள் செய்து இந்தியாவில் விற்றுக் கொள்ளைலாபம் சம்பாதிக்கிறார்கள், ஸ்காண்டிநேவியா என்னுமிடத்திலும் ஜப்பானிலும் அந்தந்தத் தேசத்தினர்கள் வீட்டுக்கட்டிடவேலைக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

ஜர்மானியர்கள் உபயோகிக்கும் வகை

ஜர்மானியர்கள் வேஷ்டி செய்யும்போது மரக்கூழ்களினின்றும் காகிதமாவுகள், காகிதக்கம்
[illegible]ங்கள் காகிதத்தொப்பிகள் முதலியன செய்தி
[illegible]ர்கள். சண்டையில் ஜெர்மானியர்கள் காகித
[illegible]களையும் மேற்ஜோடுகளையும் செய்து உப
[illegible]ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. காகிதங்
[illegible]யப்பட்ட படுக்கைகளையும் தலையணைகளை
[illegible] உபயோகிக்கின்றனர்.

[illegible] கூழினின்று காகிதம் செய்வதற்குப்
[illegible]ம்செல்லும். காகித அட்டைகள்
[illegible]திகமாகப் பணம் பிடிக்காது
[illegible]பு ஹாலந்து, ஜர்மெனி, ஜப்
[illegible]சங்களிலிருந்து காகித அட்
[illegible]ற்கு வந்துகொண்டிருந்தன.
[illegible]இந்த வியாபாரத்தைப் பிடி
[illegible]. காகித அட்டைக்கு

ஒத்துழையாமை இயக்கம்

பலமடைந்து வருகிறது.

விசேஷகாங்கரஸ் இந்தியாவின் தற்கால நிலைக்கு ஒத்துழையாமையே சரியான ஆயுதமென்று தீர்மானம் செய்த பிறகு தேசமெங்கும் ஒத்துழையாமை பலப்பட்டு வருகிறது. ஒத்துழையாமைக்காரர்கள் முதன் முதல் சட்டசபையைப் பகிஷ்காரம்செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஒத்துழையாமைப் பிரசாரவேலை செய்வோர்கள் ஆங்காங்குப் பிரசாரவேலை செய்யப் புறப்பட்டு விட்டார்கள். மகாத்மா காந்தியும் மௌலானா சௌக்கதலியும் இன்னும் இவர்களுடைய சீடர்களும் ஒத்துழையாமை இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டி சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒத்துழையாமை பிரசாரவேலை செய்வோர்கள் மகாத்மா காந்தியின் விருப்பத்திற்கு மீறி முரட்டுத்தனமாகப் பேசுதலும் நடந்துகொள்ளலும் கூடாதென்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுகாறும் தலைவர்களென்னச் சொல்லிக் கொண்டவர்கள் மௌனமாயிருந்தாலும் ஸ்ரீமான்கள் ஸி. இராஜகோபாலாச் சாரியார், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், பி. வரதராஜலுநாயுடு முதலியவர்கள் பிரசாரவேலை செய்யப் புறப்பட்டுவிட்டார்கள். திரிசிராப்பள்ளி ஜில்லா கமிட்டியார் ஓர் அவசரக் கூட்டத்தைக்கூட்டிச் சட்டசபைக்கு அபேட்சகராகநிற்பவர்களுக்கு வோட்டுகொடுக்கக்கூடாதென்று வோட்டர்களுக்கு எடுத்துச் சொல்ல 40 வாலண்டியர்களைப் பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். இவர்கள் ஜில்லா முழுவதும் செல்வார்களென்று தெரிகிறது. இவ்வாறே சமீபத்தில் தஞ்சாவூரிலும் வாலண்டியர்கள் கிராமங்களுக்குப் புறப்படுவார்களென்று சொல்லப் படுகிறது. குளித்தலை, கரூர், சேலம் முதலியவிடங்களில் கமிட்டிகள் நியமிக்கப்பட்டுக் காரியதரிசிகளும் தெரிந்தெடுக்கப் பட்டு விட்டார்கள். இவ்விடங்களிலுள்ளவர்களின் முயற்சிகளைக் கவனித்துச் சென்னை மாகாணத்தில் மற்றவிடங்களில் ஒத்துழையாமைப் பிரசாரவேலை செய்யக்கமிட்டிகள் அமைக்கப்பட்டுக் காரியதரிசிகளும் பிரசாரவேலை செய்வோர்களும் முன் வருவார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது. ஸ்ரீமான்கள் ஸி. இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் பி. வரதராஜலு நாயுடு ஆகிய இவர்கள் வியாழக்கிழமை 30-9-20 ந்தேதி காலை தஞ்சைக்கு விஜயம் செய்வார்கள். ஒத்துழையாமை இயக்கத்தின் வளர்ச்சியை எல்லோரும் வெகு ஆவலாக எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

வேண்டிய சாமான்கள் சாதாரணமானவைகளாகும். இவைகளை வீட்டில்வைத்துத் தொழில் செய்வதனால் திறமாயிராது. லாபமும்இல்லை. சுமார்லட்சரூபாய்க்குவேண்டிய இயந்திரங்களைத் தருவித்து இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். நூற்றுக்கு முப்பது வீதம் இதில் லாபம் கிடைக்குமென்று தெரிகிறது. நம்தேசத்தில் காகிதக் கூழ்கள் செய்யவேண்டியசாமான்கள் ஏராளமாகக் கிடைக்கும். பாக்குப்பட்டை, கடலைத்தோல் வைக்கோல், கருப்பஞ்சக்கை, சோளத்தட்டை, சுண்ணாம்பு, மைல்துத்தம் முதலியவைகளை வேண்டியளவு இந்தியர்கள் உபயோகிப்பதில்லை. இவைகளை இயந்திரங்களின் உதவியால் கூழ்களாக்கலாம். இத்தொழில் விருத்திக்கு இந்தியக்கூலிகள் ஏராளமாய் கிடைப்பார்கள். இந்தத்தேச சீதோஷ்ணமும் இத்தொழிலிற்கு ஒத்ததாயிருக்கிறது. ஆகவேவியாபாரிகளும் தொழிற்முயற்சிசெய்வோர்களும் காகித அட்டைத் தொழிலைக் கைக்கொண்டால் நல்ல லாபத்தை அடைவார்கள்.

காங்கிரஸ்சப்கமிட்டியின் ரிபோர்ட்.

விசேஷகாங்ரஸ் செய்த ஒற்றுழையாமைத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதைப்பற்றி யோசிக்க ஒருகமிட்டி நியமிக்கப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். இக்கமிட்டியில் மகாத்மா காந்தி மிஸ்டர் வி. ஜே. பேடல் பண்டிட் மோதிலால் நேரு முதலிய மூவரும் அங்கத்தினர்களாயிருந்து ஆலோசித்துத் தங்களுடைய ஏற்பாட்டை வெளியிட்டிருக்கிறார்கள். பொது ஜனங்கள் இதைப்பற்றியுள்ள தங்களுடைய அபிப்பிராயங்களை எல்லா இந்தியக் காங்கரஸ் கமிட்டியாருக்கு அக்டோபர் 2 ந்தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

ரிபோர்ட்டின் சுருக்கம்

காந்தியின் தீர்மான திட்டத்தைக் காங்கரஸ்முழுமையும்ஒப்புக்கொண்டாலும் அது தாற்காலிகமா முதற்படியை படித்தவர்கள் அனுஷ்டிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. பிறகு ஸிவில் மிலிடெரி உத்தியோகங்களை விடுதல் வரிசெலுத்தாதிருத்தல் முதலிய விஷயங்கள் பின்னால் கவனிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படும்.

பட்டங்களை விடுதல்

பொது ஜனவாழ்க்கையில் சம்பந்தப்படாத கனவான்களைத் தங்கள் பட்டங்களைவிடும்படி சொல்லுவது கஷ்டமாயிருக்கும். ஆதலால் ஒத்துழையாமைக் கூட்டத்தார் அத்தகைய கனவான்களைப் பேட்டி கண்டு பேசி நியாயம் செய்ய தவறிவிட்ட கவர்ன்மெண்டினிடமிருந்து பட்டங்கள் பெறுவது கூடாதென்று அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர்களிடம் முரட்டுத்தனம் எவ்விதத்திலும் காண்பிக்கக்கூடாது.

பள்ளிக்கூடங்கள்

அரசியல் நிலையை அறிந்த பெற்றோர்கள் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களினின்றும் கவர்ன்மெண்ட் உதவிபெற்று நடத்தப்படும் பள்ளிக்கூடங்களினின்றும் தங்கள் மாணவர்களை அப்பள்ளிக்கூடங்களினின்று நீக்கிவிடுவார்களென்றும் இப்படிச்செய்வது சுலபமான காரியமென்றும் கமிட்டியார் நினைக்கின்றனர். காலேஜ்பட்டங்கள் கவன்மெண்ட் வேலைக்கு உதவியாக விருக்கின்றன. கூடியசீக்கிரம் சுய ஆட்சி பெறவேண்டுமானால் கவன்மெண்ட் உத்தியோகங்களை ஒழிக்க வேண்டும். இல்லையேல் பலதலைமுறைகள் வரையில் சுயஆட்சி அடைய முடியாது. முதன் முதல் கவர்ன்மெண்ட் பள்ளிக் கூடங்களைக் காலிசெய்து விட்டால் தேசீயப் பள்ளிக்கூடங்கள் தானாக உண்டாகும். தேசீயப் பள்ளிக்கூடங்கள் ஏற்படும் வரையில் வீட்டுப்படிப்பைக் கற்றுவரவேண்டும் இந்த விஷயத்தில் தீவிரமான பிரசாரவேலை அவசியம். 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இதை அறிவுறுத்த வேண்டும். இப்போது கவர்ன்மெண்ட் உதவிப்பெற்று வரும் பள்ளிக் கூடங்கள் பெற்றுவரும் கிராண்டை நிராகரித்து விட்டால் அவைகள் தேசீயப்பள்ளிக் கூடங்களாக மாறிவிடும்.

கோர்ட்டுகளைப் பகிஷ்காரம் செய்தல்

கவர்ன்மெண்டார், கோர்ட்டுகள்மூலமாகவும் அவைகள் விதிக்கும் தண்டனைமூலமாகவும் அளவிடாத செல்வாக்கு பெற்றுவருகிறார்கள் தேசம் சுயஆட்சிபெறவேண்டுமென்று தாகமெடுத்து நிற்கும்போது நாம்சில்லரைச்சச்சரவுகளை அடக்கிவிடவேண்டும். இதுகாறும்பொதுஜனவாழ்க்கையைநடத்தி, வந்த வக்கீல்கள் பொதுஜன வாழ்க்கைக்கே தங்கள் வாழ்நாளை அர்ப்பணம் செய்யவேண்டும். இவ்வாறு முன்வரும் வக்கீல்களின் சாப்பாட்டுக்குப்பொது

ஜனங்கள் உதவிசெய்யவேண்டும். அவர்கள் பிரசாரவேலை செய்பவர்களாகவும் தேசியபள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர்களாகவும் மத்தியஸ்தம் செய்வோர்களாகவும் எடுத்துக்கொள்ளப் படலாம். ஒத்துழையாமைக்கூட்டத்தார் பட்டங்களை விட வேண்டுமென்று கேட்பதுபோல் அவர்கள் வக்கீல்களையும் பேட்டி காணலாம்

பண்டிட்மோதிலால்நேரு இப்போது கோர்ட்டுகளில் முடிவுசெய்யப்படாத வழக்குகளை மத்தியஸ்தர்கள் முன்னிலையில் தீர்த்துக்கொள்ளும்படி வக்கீல்கள் கட்சிக்காரர்களைத் தூண்டவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். மத்தியஸ்த கோர்ட்டுகளுக்கு, ஜட்ஜுகளாகவிருக்கப் பிரியமுள்ள வக்கீல்களின் பெயர்களை ஜாபிதா செய்யவேண்டும் மத்தியஸ்தர்கள் செய்யும் தீர்ப்புகளைக் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொள்ளாமற்போனால், அவ்வாறு ஏற்றுக்கொள்ளாதவர்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

சட்டசபைபகிஷ்காரம்

கிலாபத் விஷயத்திலும் பஞ்சாப் விஷயத்திலும் இழைக்கப்பட்ட தவறுகள் நிவர்த்திக்கப்படாதவரையில் சட்டசபையைப்பகிஷ்காரம் செய்ய வேண்டும். ஓட்டர்களும் ஓட்கொடுக்கக்கூடாதென்று வற்புறுத்தப்பட வேண்டும். ஓட்கொடுக்கவில்லையென்று ஒரு உறுதிமொழி ஓட்டர்களிடமிருந்து வாங்கவேண்டும். மெஸப்போத்தேமியா முதலிய விடங்களுக்கு வேலைகுப்போகாதிருக்கப் பிரசார வேலை செய்யவேண்டும்.

அன்னியசாமான்களை விலக்கல்

அந்நிய சாமான்களை விலக்கல் என்ற வார்த்தை ஏதோ துர் அதிர்ஷ்டவசமாகக் காங்கரஸ் தீர்மானத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கூடியவரையில் ஜனங்கள் அந்நிய சாமான்களை விலக்குவதோடு டாம்பீக உடைகளையும் பகிஷ்காரம் செய்யவேண்டும். சுதேசிய விரதத்தைக்கைக்கொள்ள வேண்டுவது அவசியம். ஒவ்வொரு தெருவிலும் கைத்தறிகள் ஏற்படவேண்டும். சுதேசியவிரதமுடையவர்கள் வேண்டியவிஷயங்களுக்கு மானேஜர் சத்தியக்கிரகாசிரமம், ஸபர்மதி, ஆம்தாபாத் என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

பணம் தேவை.

தேசமெங்கும் எல்லாக் காங்கரஸ் கிளைச்சபைக்காரர்கள் காங்கரஸ் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரப்பணம் சேர்க்கவேண்டும். ஜனங்கள் மத்தியில் சமாதானம் நிலைக்கச்செய்ய வாலண்டியர் படைகள் ஏற்படுத்தவேண்டும்.

ஓரிடத்தில் ஒத்துழையாமைக்காரர்கள் அதிகமாயிருந்தால் அவர்கள் பல பிரிவுகளாக பிரிந்து ஒவ்வொருபிரிவினர் ஒவ்வொரு காரியத்தைச்செய்யவேண்டும். அதிகம் பேரில்லாதவிடத்தில் அவர்கள் சட்டசபையைப் பகிஷ்காரம்செய்யவேண்டிய விஷயமாய் மட்டும் வேலைசெய்யவேண்டும். டிசம்பர் மாசத்திற்குள் இதன் முடிவு தெரியவேண்டுமாதலால் ஆங்காங்கிருக்கும் பிரசாரவேலை கமிட்டியார் தாங்கள் செய்த வேலையை எழுதி ரிபோர்ட் அனுப்பவேண்டும்.

ஸர் சிவஸ்வாமி ஐயருக்கு ஒரு வேண்டுகோள்.

பழமார்நேரி கிராமம் இந்த ஜில்லாவில் ஆரிய பாஷைக்கல்விக்கு ஒரு இருப்பிடமாய் இருந்து வருகிறது. ப. வா. மஹாமஹோபாத்யாய சுந்தர சாஸ்திரிகளின் வேதாந்த சாஸ்திர அறிவு உலகம் அறிந்தவிஷயம். இனி மஹாமஹோபாத்யாய பஞ்சாபகேசசாஸ்திரிகள் மைசூர் ஸம்ஸ்கிருத காலேஜை நன்கு அலங்கரிக்கிறார். ஸர். சிவசாமி அய்யர் அவர்களின் ஸம்ஸ்கிருத பாண்டித்யம் யாருக்கும் தெரியும். தஞ்சை வக்கீல் பி. ஆர். நடேசய்யர் அவர்களின் ஸமஸ்கிருத பாஷாபரிச்சயம் இங்கு எல்லோரும் அறிவர். இப்போது இவ்வூரில் ப.வா சுப்ரமணியசாஸ்திரிகள் தமது மரண சாஸனத்தில் பிராமண பையன்கள் வேதாத்யயனம் செய்வதற்கும் அவர்களுக்குச்சாப்பாடுபோடுவதற்கும் தகுந்த ஏற்பாடு செய்திருப்பது இப்போது ஷர்ஜிதத்தில் இல்லை. அது விஷயமாய் சமரச போதினிமூலமாய் தகுந்த ஏற்பாடு நடக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், ஆரியக்கல்வியின் அருமையை உணர்ந்த ஸர்-சிவசாமி அய்யர் அவர்கள் தமதுதிருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் ஹாஸ்டலில் பிராமணப் பிள்ளைகள் கொஞ்சம் நேரம் வேதஅத்யயனம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேனென்று பழமார்னேரி வாசி ஒருவர் எழுதுகிறார்.

சங்கஉத்தாவு

எல்லா இந்திய சுயஆட்சிசங்கத்தார் காங்கரஸ் செய்திருக்கும் ஒற்றுழையாமைத் தீர்மானத்தை முன்னிட்டு கீழேகண்ட மகஜருக்குக்கையெழுத்துகள் வாங்கவேண்டுமென்று தங்கள் கிளைச்சங்கத்தார்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

"இந்திய நாஷனல் காங்கரஸும் எல்லா இந்திய முஸ்லீம் மகாநாடும் நிறைவேற்றிய ஒத்துழையாமைத் தீர்மானத்தைக்கருதி—தொகுதியிலுள்ள எங்களுக்கு மாகாணச் சட்ட சபையிலும் இராஜப்பிரதிநிதி சட்டசபையிலும் அரசாங்கசபையிலும் ஒருவரும் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டாம். நாங்கள் இவ்வாறு சொல்லியும் எலக்ஷன் அபேட்சகர்கள் சட்டசபைக்குச்சென்றார்களேயானால் அவர்கள்எங்களுடைய பிரதிநிதிகளல்லரென்பதைத்தெரிவிக்கிறோம். கிலாபத் விஷயத்திலும் பஞ்சாப் விஷயத்திலும் இழைக்கப்பட்ட தவறுகள் சரிப்படுத்தப்பட்டு தேசத்தில் சுயராஜ்சம் ஏற்படுத்தப்படும் வரையில் புதுசட்ட சபைகளில் எங்களுக்கு ஒருவரும் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடாது."

மேற்கூறிய இந்த மகஜருக்கு வோட்டர்களிடம் கையெழுத்து வாங்கும்போது அவர்கள் மகஜரில் கண்ட விஷயங்களை நன்றாய் அறியவேண்டும் வோட்டர்களைக்கட்டாயப்படுத்தியோபயமுறுத்தியோகையெழுத்து வாங்கக்கூடாது. ஒருதொகுதியிலுள்ள வோட்டர்களில் படிக்குப் பாதிபேர் மகஜரில் கையெழுத்துபோட்டு விட்டால். அதைக்கொண்டுபோய் காண்பித்து அபேட்சகராக நிற்பவர்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி வற்புறுத்தப்படவேண்டும்.

ஒத்துழையாமைக் கூட்டம்

இம்மாதம் 26உ பிற்பகல் மூன்று மணிக்குத் தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் பொதுக் கூட்டமொன்று பெஸன்ட் லாட்ஜில்கூடியது. இவர்கள் சட்டசபைக்கு அபேட்சகர்களைச் சிபார்சு செய்யக்கூடுகிறார்களென்ற செய்தியைக்கேட்டவுடன் ஒத்துழையாமைக்காரர்களும் கூட்டத்திற்குச் சென்றார்கள். கனம் வி. கே. இராமானுஜாசாரியார் அக்கிராசனம் வகித்தார் ஸ்ரீமான். டி. இராமச்சந்திரசெட்டியார் ஒருகடிதத்தை அக்கிராசனர் கையில் கொடுத்தார். அக்கிராசனர் அதில் எழுதப்பட்டுள்ள தீர்மானத்தை வாசித்த பிறகு ஸ்ரீமான் செட்டியார் காங்கரஸ், ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறதென்றும் அதன்படி எல்லோரும் கட்டுப்பட்டு நடக்கக்கடமைப்பட்டவர்களென்றும் இக்கூட்டம் பொதுக்கூட்டமாதலால் தாம் இக்கூட்டத்தில் செய்யப்படும் தீர்மானத்திற்கு விரோதமாக ஒரு தீர்மானம் கொண்டு வரப்போவதாகவும் சொன்னார். மிஸ்டர் ஆசாரியார் தாம் மகாத்மா காந்தியின் முதல் சிஷ்யரென்று நினைத்திருப்பதாகவும் எனினும் அவருடைய ஒத்துழையாமை தேசத்திற்கு நன்மையைக் கொடுக்காதென்றும் தஞ்சாவூர் ஜில்லா விவசாய ஜில்லா வானபடியால் கண்ணம்பாடி ஸெட்டில்மெண்ட் விஷயங்களைக் கவனிப்பதற்கு மிராசுதார்களே சட்டசபையில் மெம்பர்களாயிருக்க வேண்டுமென்றும் அவர்கள் பெரிய மிராசுதார்களாயிருந்தால் அவர்களுடைய வார்த்தைகளைக் கவர்ன்மெண்டார் மதிப்பார்களென்றும் சொன்னார்,

ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாசப் பிள்ளையவர்கள் தாம் மகாத்மாகாந்தியினிடம் மதிப்பு வைத்துள்ளவரென்றும் ஆனால் அவரது ஒத்துழையாமைக்கொள்கை தேசத்திற்கு நலத்தைச் செய்யாதென்றும் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைத்துதான் தேசமுன்னேற்றமடையவேண்டுமென்றும்ஒத்துழையாமைக்காரர்களைப் போல் நா[ங்]களும் தேசபக்தியுடையவர்களென்றும் [கூ]றினர்.

ஸ்ரீமான் செட்டியாரின் ஆட்சே[பம்]

ஸ்ரீமான் டாக்டர் டி. இராமசந்தி[ரசெ]ட்டியார் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசப்பிள்ளை கூறி[ய]தற்கும் அக்கிராசனர் சொல்லியதற்கு[ம்] சமாதானங்கள் கூறிவிட்டுநோட்டீஸில் அ[றி]விக்கப்பட்டபடி இக்கூட்டம்பொதுக் கூ[ட்ட]மென்று சொன்னார்.

அக்கிராசனர்நோட்டீஸில் வி[...] குறிப்பிடாமலிருந்தாலும், கவர்ன்[...] ரோடு ஒத்துழைப்பவர்களே [...] த்திற்கு வரவேண்டுமென்று [...] டியவர்களின் அபிப்பிராய[...] னர்.

உடனே டாக்டர் செ[...] ன் இ. சூரியநாராய[...] எழுந்துபோக, ஒத்து[...] ல்லோரும் வெளி[...]

நயம் ஜவுளி! விஸசரசம்!!

உடனே கியாட்லாக்குக்கு எழுதுங்கள். நானாவிதமான நயம் ஜவுளிகளை வி. பி. யில் பெற்றுக்கொள்ளுங்கள். வியாபாரிகளுக்கும் சகாயமாய்க் கிடைக்கும்.

மூ. ரா. சுந்தரராஜய்யர்
ஜவுளி வியாபாரம், கீழாவணி மூலவீதி,
மதுரை (S. I).

பிறகு அக்கிராசனர் சில வார்த்தைகள் கூறியபின்னர், கும்பகோணம் ஸ்ரீமான் சிவகுருநாதசெட்டியார் தஞ்சை ஜில்லா விவசாய தேசமானபடியால் பெரிய மிராசுதார்களான ஸ்ரீமான்கள் வி. எ வாண்டையார், வடபாதிமங்கலம் சோமசுந்தரமுதலியார், சீர்காழி சிதம்பரநாத முதலியார் இம்மூவரும் ஜனங்களின் பிரதிநிதிகளாய் சட்டசபைக்கு அபேட்சகராக நிற்கவேண்டுமென்று பிரேரபிணை செய்தார். இது ஜில்லா போர்டுமெம்பர் ஸ்ரீமான் சாமிநாதபிள்ளையால் ஆமோதிக்கப்பட்டதும் தீர்மானம் ஏகமனதுடன் எல்லோராலும் நிறைவேற்றப்பட்டது. மிஸ்டர் பன்னீர்செல்வம் இராஜப்பிரதிநிதி சட்டசபைக்குப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவதைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று சொல்ல அவ்விஷயத்தைக் கவனிக்க இக்கூட்டம் கூட்டப்படவில்லையென்று பதிலளிக்கப்பட்டார். பிறகு மிஸ்டர் செல்வம் சீர்காழி முதலியார் கூட்டத்திலில்லாததால் அவர் சட்டசபைக்கு நிற்க இஷ்டப்படாவிட்டால் அவருக்குப்பதிலாக பிறகுயாரைத் தெரிந்தெடுக்கலாமென்றுகேட்க, அவ்விஷயமும் இப்போது கவனிக்கப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டார். பிறகு கூட்டம் கலைந்தது.

மற்றொரு கூட்டம்.

ஒத்துழையாமைக்காரர்கள் நேராகவந்து மணிக்கூண்டு மைதானத்தில் ஒருபெருங்கூட்டம்கூடினார்கள். முஸ்லிம்கள் அதிகமாய் வந்திருந்தார்கள். டாக்டர்ஜயராமய்யர் அக்கிராசனம் வகிக்க, ஸ்ரீமான்கள் இ. சூரியநாராயண ஐயர், டி. இராமசந்திர செட்டியார் சுவாமி அற்புதானந்தர் அப்துல்ரகிம்சாகிப் முதலியவர்கள் ஒத்துழையாமைஇயக்கத்தின் வரலாறுகளை ஆதியோடந்தமாகச் சபையோர்களுக்குவிளக்கிக் காட்டினார். ஸ்ரீமான் செட்டியார்காங்கரஸ்தீர்மானப்படி எல்லோரும் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் ஒத்துழையாமைத் தீர்மானத்திற்கு மீறி சட்டசபைகளுக்கு அபேட்சகராக நிற்பவர்களுக்கு வோட்டர்கள் வோட்டு கொ[illegible]க்கூடாதென்றும் ஒரு தீர்மானம் [illegible]வந்தார். அப்போது இதுகாறும் [illegible]ளென்று சொல்லிக்கொண்டவர்கள் [illegible]களைக் கைவிட்டு விட்டார்களென்றும் [illegible]வர்களை இனி நம்புவது பிரயோஜனமில்லையென்றும் காங்கரஸ் தீர்மானத்தை அமுலு[illegible]க் கொண்டுவரவேண்டியது பொறுப்பு[illegible]ளி ஜனங்களுடையதென்றும் வோட்டர்க[illegible]ருவருக்கும் ஓட் கொடுக்ககூடாதென் [illegible]கொன்னார்.

[illegible]கு காகோஷத்தினிடையே தீர்மா[illegible]வேற்றப்பட்டது.

[illegible]றவாரம் ஏற்பட்ட தப்பல் சே[illegible]றுத்தம் இன்னும் நின்றபாடி[illegible] அலட்சியமா யிருக்கிறார்கள். [illegible]கள் கோரிக்கை நிறைவே[illegible]ப்போவதில்லை யென்று

பிழைக்கும்வழி

மகாத்மா காந்தி தம் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதுகிறார்.

மில்காரர்களின் நலத்தைக் கருதி சுதேசித் துணிச்சாலைகள்சுதேசியத்தை விருத்தி செய்யாமல் சுதேசியத் துணிகளின் விலைகளை எங்ஙனம் உயர்த்தி விட்டனவென்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இது நிற்க ஒருவன் உண்மையான சுதேசியத்தைச் சொற்பதொகை வைத்துக்கொண்டு அபிவிருத்தி செய்வதோடு தன்னுடைய ஜீவியத்தையும் மிதமாகஎவ்விதம் கழிக்க முடியுமென்பதைக் கீழே விவகரிக்கிறேன் :—

உதாரணமாக புருஷன்பெண்ஜாதிக்கு அவர்கள் குழந்தைகள் பத்து வயதிலும் 5-வயதிலும் இரண்டு சிறுவர்களிருக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். அவர்களடங்கிய ஒரு குடும்பத்தார் 500 ரூபாயைக் கொண்டு ஒரு கத்தர் துணிக்கடையை (மோட்டா துணி) இருபதினாயிரம் ஜனங்களடங்கிய ஊரில் பத்து ரூபா வாடகை கொடுத்து ஏற்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் அந்த விடத்திலேயே வசிக்க ஏற்பாடுசெய்து கொள்ளலாம். அவர்கள் தாங்கள் கொண்டுவந்த மோட்டாத் துணிகளை (கத்தர் துணி) நூற்றுக்குப் பத்து வீதம் விற்றால் அவர்களுக்கு மாதம் 50 ரூபாய் கிடைக்கும். வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளக் கூடாது. ஒழிந்த நேரத்தில் பெண்ஜாதியும் சிறுவர்களும் கடையைச் சுத்தமாகப் பெருக்கிவைத்துக் கொள்வதோடு புருஷன் வெளியே போயிருந்த சமயத்தில் விற்பனையும் செய்யவேண்டும். இந்தவேலை தவிர அவர்கள்நூல் நூற்கவும் செய்யலாம். ஆரம்பத்தில் கத்தர் வேஷ்டிகள் கடையில் விற்காமலிருக்கலாம். அப்போது புருஷன் அத்துணி களை எடுத்துக் கொண்டு வீடுவீடாகச் சென்று விற்கவேண்டும். இவ்வாறு அவன் கொஞ்சகாலம் செய்தானேயானால் பிறகு அவனுக்கு வாடகைக்காரர்கள் அகப்படுவார்கள்.

மாதம் நூற்றுக்குப்பத்துவீதம் லாபம்கிடைக்குமென்று நான் சொல்லியதைக்கேட்டு நண்பர்கள் ஆச்சரிய மடையவேண்டுவதில்லை. கத்தர் துணிகள் கேவலம் ஏழைகளுக்காக ஏற்பட்டவையல்ல, கத்தர் துணிகளை உபயோகிப்பதினால் நாம் உடைகளுக்குச் செலவிடும் செலவு பாதிக்குக் குறைந்துவிடும். காரணம் அதன் உபயோகம் நமது எண்ணங்களையும் ஆசைகளையும் அடியோடு மாற்றிவிடுகிறது. கத்தர் துணியினால் எனக்குப் பணம் மிகுதியென்பது எனக்குத் தெரியும். தேசபக்தியை முன்னிட்டுச்சுதேசிய உடைகளை உடுக்கவேண்டுமென்பவர்கள் கத்தர் துணியை நூற்றுக்குப் பத்து வீதம் லாபம் கொடுத்து வாங்கவேண்டும். கத்தர் துணிகளை ஜனங்களுக்கு அறியப்படுத்துவது சாதாரண காரியமல்ல இதற்குச் சிரத்தையும் உழைப்பும் அபிமானமும் அவசியம். கத்தர் துணி விற்பவன் மொத்தமாக ஒரு கடையில் எல்லா கத்தர் துணிகளையும் வாங்க முடியாது. அவன் அங்குமிங்கும் அலைந்துநல்ல கட்டர் துணியை வாங்க வேண்டும். அவன் உள்ளூர் நெசவுக்காரர்களைச் சந்தித்து கையால் நூத்த நூலைக்கொண்டு நெசவு செய்யச் சொல்ல வேண்டும். அவனுடையகாரியம் இத்துடன் முடிந்ததாக நினைத்தல்கூடாது. தன் ஜில்லா ஸ்திரீகளுக்குக் கையால் நூல் நூற்பதைக்கற்றுக் கொடுத்து அதை ஜில்லாமுழுமையும் பிரசாரம் செய்யவேண்டும். இவ்வேலைகளெல்லாம் சுலபமாக செய்யக்கூடிய காரியங்களல்ல. அறிவும் சாமர்த்தியமும் படைத்து முன்சென்று காரியங்கள் செய்யக்கூடியவர்கள்தான்வேண்டும். இத்தியாதிகுணங்களைக்கொண்டு தேசக்ஷேமத்தை முன்னிட்டுச் சுதேசிய இயக்கத்தை அதிகரிக்குச் செய்பவன் நூற்றுக்குப்பத்து வீதம் லாபம் எடுத்துக்கொள்வதைஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

முந்தவேண்டும்.

சேலம் ஜில்லா எல்லா போர்டு எயிடெட் எலிமெண்டரி உபாத்தியாயர்கட்கு.

நமது குறைகள் நிவர்த்திக்காப் படவேண்டி சேலத்தில் 15—5—20ல் சேலம் அண்டு திருச்சிஜில்லா எலிமெண்டரி உபாத்தியாயர்களின் மகாநாட்டினர் ஒரு திட்டத்தை வெளியிட்டனர். அதைப்பின்பற்றி மற்ற ஜில்லாக்களில் ரேஞ்சு ஜில்லா சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு தனிமையாய் எலிமெண்டரி உபாத்திமை ஜில்லா கான்பரன்ஸ் நடத்தி வருகிறார்கள்.

ஆனால் சேலம் ஜில்லாவிலோ இரண்டொரு ரேஞ்சு சங்கங்கள்தான் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாயும், பல ரேஞ்சினர் முயற்சித்து வருவதாயும் தெரிகிறது. நிற்க சேலம் ஓமலூர் திருச்சங்கோடு ஆத்தூர் ரேஞ்சினர் யாதொருமுயற்சி எடுத்துக்கொண்டதாக அறிகுறிகள் காணவில்லை ஆகையால் இவ்வருட இறுதிக்குள் ஜில்லா கான்பரன்ஸ் நடைபெறவும் கவர்ன்மெண்டிற்குக் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளவும் அதிசீக்கிரத்தில் ரேஞ்சு ஜில்லா சங்கங்கள் ஏற்பட அதிதீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவும் மற்றும் ஜில்லா எலிமெண்டரி உபாத்தியாயர்கள் இதைப்போன்று நடத்துகொள்ளுவதும் தவிர மாகாணசங்கம் (தனிமையாய் எலிமெண்டரி உபாத்தியாயர்க்கென) ஸ்தாபிக்கவும் அதற்குச் சேலம் மத்திய ஸ்தானமாயிருக்கவும் எலிமெண்டரி உபாத்திமை மாகாண கான்பரன்ஸ் நடைபெறவும் முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என நம்புவதும் தவிர எல்லோரையும் பிரார்த்தித்தும் கொள்ளுகின்றனன்.

காரியதரிசி எ. உ. ச.
நாமக்கல் ரேஞ்சு } எம். சென்னகிருஷ்ண

சுமார் 60000 சவுக்குமரங்கள் கீழ்நிலமுள்பட எலம்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு 1920ளு I. P. 19-நெ. ஷிடியூலைச் சேர்ந்ததும மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்குப் போகும் ரோட்டில் நான்காவது மைலில் அடுத்த கீழ்புறம் உள்ள திருப்பாலக்குடி வட்டத்தை சேர்ந்த புஞ்சையில் 8. 10. வருஷங்களுக்கு முன் பயிர் செய்து இப்போது பல அளவு மரங்களாயிருக்கிற சுமார் அறுபதினாயிரம் சவுக்கு மரங்களை கீழ்நிலமுள்பட அடுத்த அக்டோபர்மீ 17ந்தேதி ஞாயிற்றுக்கிழமைபகல்12 மணிககு ஆரம்பித்து மன்னார்குடி டவுன் கோபால சமுத்திரம் தெருவீதி 23 நெம்பர் வீட்டுத் திண்ணையில் பகிரங்கமாய் எலம் போடப்படும். எலம் கேட்கும் முன்னுக்கு ரூ 100 டிபாசிட் கட்டியும் எலம் எடுத்த உடன் எடுத்த கிறயத்தில் நாலில் ஒரு பங்கை செலுத்தி ரசீது பெத்துக்கொண்டும். அது முதல் ஒரு மாதத்துக்குள் பாக்கித் தொகையை செலுத்தி தன் செலவில் சாசனம் பெற்றுக் கொள்ளுகிறது என்ற ஏற்பாட்டின் பேரில் எலம் போடப்படும்.

மற்ற நிபந்தனைகள் முதலிய விபரத்துக்கும் ஜாகாவை போய் பார்க்கவேண்டிய வசதிக்கும் அடியில் கையொப்ப மிட்டவருக்குத் தெரிவித்தின் பேரில் எல்லா விதத்திலும் வேண்டிய சவுகரியத்துக்கு ஏற்பாடு செய்யப்படும்.

சர்க்கார் கேள்வை ரூ. 4000

காடல்ரோடு
தஞ்சாவூர்,
22-9-20 } T. கோதண்டராமய்யங்கார்,
ஐகோர்ட்டு வக்கீல்,
ஸ்பெஷல் ரிசீவர்.

மேற்குறிப்பிட்ட முறையில் சுதேசியத் துணிகளைப் பரவசெய்யுமிடம் உண்மையாகவே சுதேசிய முயற்சிகளுக்கு முக்கியஸ்தானமாகிவிடும். நான் சொல்லியவைகளைத் தேசத்தில் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுதேசி துணிக்கடையின் மானேஜர்கள் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

வைத்தியக்குறிப்புகள்.

பிழைதிருத்தம்.

...வணிமீ 24உ "ஸமரஸ்போதினி" வைத்தியக்குறிப்பின் கீழ் (1) இலக்கமிட்ட முறையில் சுக்கும் சீரகமும் (கால் கால் பலம்) என்றிருப்பதற்கு (அரைக்கால் பலம்) சீரகம் (அரைக்கால்பலம் என்றும், (கருப்பு வெல்லம்) என்பதை (கரும்பு வெல்லம்) என்றும்;

(2) இலக்கமிட்ட முறையில் 3-வது வரியிலுள்ள (நீர்) என்...தை (தீர) என்றும்; திருத்திக் கொள்ளவே...

அஜீர்ண ...கங்கள் தீர:—நாட்டுச் சர்க்கரை என்னும் பழு...புச் சர்க்கரை (அரைப்பலம்) தோ...சீவிய அதிமதுரம் (காலேஅரைக்கால் பலம்) ...தோல்சீவிய இஞ்சி, ஏலக்காயை உரித்து எடுத்த ஏலரிசி ஒ...ான்றும் தனித்தனி (கால் பலம்) அரிசிதி... அரைக்கால் பல) இவற்றில் சர்க் ... மற்றவற்றை ஒன்றிரண்டாய்த் ...பாத்திரத்தில் போட்டு, முன் ...ம் கூட்டி, சுத்தமான கிணற்று ஜ...ட்டு, அரைக்கால்படியாக சுண்ட கா...டு;

...லையாக தினம் இரண்டுவேளை கால் ...ழத்தை (வீசம்படி பசுவின் பாலில் ...பிட்டு வரவும், இப்படி, இதே கியாழ ...றுநாள் ஆறுவேளை சாப்பிடவேண்டும். ...ர் தேகநிலைக்குத் தக்கபடி வாரத்தில் மூ...ாக சில வாரங்கள் வரையில் அடுத்துச் ...வா

...ாஜனம்:-ஈற்பதுவகை பித்த ரோகங்கள், ...ளாக்காளம், வயிற்றுவலி, வாயுவால்உண்...ம் குன்ம ரோகங்கள் இவற்றால் கிளைக்கும் ...டர் ரோகங்கள் யாவும் தீரும். எனவே அஜீர ...சம்மந்தமாய் குடலில் உண்டாகும் பலவித ..., வாத, சம்மந்தமான பித்தவாயு ரோகங்கள் ...யும் தீரும்.

1,000 ரூபா இனும்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்.



தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஐதராபாத், மதராஸ் முதலிய இடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிகாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டி பிகேட்டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியால்செய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் ஏற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவாத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மத விரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளி பஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதரம் வரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரியவரும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டப்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைக் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்னுலால், டில்லிவைத்தியர், சாலாமிசிரிமுறப்பா டிபோ, பெங்களூர் சிடி.

சர்வஜன மித்திரன்.

வாரம் இருமுறை புதன் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

சீர்வளம் நிலவள மலிந்த பினங்கின் கண் வந்துலாவும் நமது இந்திய வாசிகளின் முன்னேற்றத்தையும் கல்வியபிவிருத்தியையும் உள்ளத்திலூன்றி அன்னவர்கள் பாஷாபிமானம் ஜனபிமானம் மதாபிமானம்பூண்டு சமூக வாழ்வில் நற்பெயரெய்தவும் அரசாங்க வர்க்கத்தினர் பால் விசுவாசம் படைத்தொழுகவும் உலகின் கண் ஆங்காங்கு நடைபெறும் சமாச்சாரங்களை எளிதிலுணரவும் வேதம், வைதீகம், வேதாந்தம், சித்தாந்தம் சாஸ்திர ஞானங்களையும் ஏனைய நாட்டின் சம்பவங்களையும் அங்கத்திலேந்தி வெளியுலாவ மகுடத்தில் காணும் நாமம்புனைந்த தமிழ் பத்திரிகை அச்சிடப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையை யாவரும் ஆதரிப்பார்களாக.

சந்தா விபரம்.

உள்ளூர் சந்தா.		வெளியூர் சந்தா.	
வருஷம் 1-க்கு	$10 00	வருஷம் 1-க்கு	$15 00
6-மாதத்திற்கு	5 50	6-மாதத்திற்கு	8 00
3-மாதத்திற்கு	3 00	3-மாதத்திற்கு	4 50
1-மாதத்திற்கு	1 00	1-மாதத்திற்கு	1 50
தனிப்பிரதி 15-காசு		தனிப்பிரதி 18-காசு.	

கூ. அ அசன் முகையதீன்,
மானேஜர், சர்வஜன மித்திரன்,
97. பினங் ஸ்திரீட், பினங்கு.

ஹிதாயத்துல்இஸ்லாம்.

இப்பத்திரிகை ஜாதிவித்தியாச மில்லாமல் எல்லாமார்க்கங்களையும் கல்வியையும் வியாபாரத்தையும் இராஜாங்க சட்டத்தையும் பொது ஜன காரியங்களையும்தைரியமாய்பயமில்லாமல்எடுத்துப் பேசும். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காண்பிக்கும். வாரம் 10,000 கப்பிகள் வெளியாகின்றன. வருஷ சந்தா ரூ 5-0-0 சிங்கப்பூர் பினங்கு ரூ 7-7-0. முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. இல்லை.

விலாசம்:—(நைசாம்)

டாக்டர் H.H. மவ்லானா சையத்ஹுசைனி
69. டீன்ஸ் ரோடு கொழும்பு

உபயோகித்தீர்களா?

எதுவும் ஒரு முறையாவது பரீக்ஷை பார்க்கவேண்டியதுண்டு. பரீக்ஷித்தால் "உமாஷங்கர்" மூக்குத்தூளே சர்வ சிலாகியமென்பதைக் கண்டு கொள்ளுவீர்கள்...

கோயமுத்தூர் ஜில்லா அனுப்பு... யம் (No. 2064) T. M. C. எழுது... "தங்கள் தூள் சிரேஷ்டமாயிருக்கிறது... நாளுக்கொருதரம் 15 பலம் அனுப்பி வ...ங்கள்."

5 பலம் வி. பி. தபாற் கூலியுள்பட அணா 15.

"ஸ்ரீ உமாஷங்கர்" ஔஷதாலயம்,
சு. பிராட்வே, சென்னை

மணித்தைலம்.

பரிமள மிகுந்த வாசனைத்தைலம். சாஸ்திர முறைப்படி காய்ச்சின தைல... உபயோகிக்கிறவர்களுக்கெல்லாம் அற்புதமான குணத்தைக் கொடுக்கிறது. சொ... வெளிவந்துலாவும் தைலத்தைப்போல் கருதிவிடக்கூடாது. நமது மணித்தைலம் 3... விற்பனையாகி வருகிறது. தலைமயிரை உதிராமற்றடுப்பதன்றி மிருதுவாயும் கறு... செய்யும். மூளையைகுளிரச் செய்கிறது. ஒரு புட்டியின் விலை ரூ. 1.

வைத்தி...

மணிசங்கர் கோவிந்தஜி, ஆதங்க நிக்ரஹ ஔ...
26...

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப்பிரகாசம்.

நவாத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனால் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.
விலை அணா 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

மேனகா 3—0—0

இரண்டு பாகங்களும்

பாலாமணி	2— 0	வீரநாதன்	0—12
விஜயசுந்தரம்	2— 0	இரகுநாதன்	0—12
அம்புஜாக்ஷி	1—12	சித்தார்த்தன்	0—12
ஆதிலக்ஷ்மி	1—12	கயற்கண்ணி	0— 8
ரங்கநாயகி	1— 4	கோகிலம்பாள்	0—12
ஜகதீசன்	1— 4	கமலாயினி	1—12
ஆனந்தமடம்	1— 0	ஜயலக்ஷ்மி	0— 0

இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்கள் எங்களிடம் இருக்கின்றன. எமது கியாட்லாகுக்கு உடனே எழுதுங்கள்; இனாமாய் அனுப்பப்படும்.

சாரி அண்டு கம்பெனி
தபால் பெட்டி 281, மதராஸ்

சவரன் படைமருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகப்படைகளையும் மேகரணங்களையும், வண்ணான் சிரங்கு பொறுக்க, முடியாத நமைச்சல்களையும் 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றால் பணம் வாபீஸ் செய்யப்படும். புட்டி 1-க்கு அணா 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனாம்.

சவரன் அண்டு கம்பெனி,
10, கச்சாலீஸ்வர அக்ரஹாரம், சென்னை.

" தாங்கள் "

நோயற்ற வாழ்வுடன்
சுக ஜீவியாய் ஜீவித்திருக்கவும், ஆயுள் விருத்தியையும் சந்தான சந்ததிகளையும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்,

தங்களுக்கு வேண்டுமானால் ... அணாஸ்டாம்பு அனுப்பி ... இனாமாகவே அனுப்பிவை

S. P. M.
... னிராவுத்தர்,
... ங்கைமான்,
தஞ்சை ஜில்லா.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம் ... சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலான துகளை ஊட்டுகிறவன்.
,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்
சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,
நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0
சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.
விலாஸம்:—

பி. எஸ், ராய். ...

பெரிய கம்பெனி! **நாணயமான சரக்குக...**

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, ... விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்... வேஷ்டிகள், தாவணிகள், மலபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு ... களும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் நெய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 மு... 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 மு... 35 ரூபா வரையும் 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுககும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்
கேட்லாக் இனாம்!

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.



உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்த லட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு எஃகுத் தகடுகளினால் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மலகூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன. நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிறார். ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்குக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, **Estd. 1906.**
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.